
₹10

fmpb

# அறைகூவல்

Volume 54 | Issue 10 | October 2024

*“பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்; தலைக்கல்லை அவன் கொண்டுவருவான்;” சகரியா 4:7*



# வல்லமையுள்ள தேவன்!

## சர்வ வல்ல தேவனுக்கு முன் நீ எம்மாத்திரம்?

நான் எம்மாத்திரம்

2 சாமுவேல் 7:18

# ஆரம்ப வரிகள்...

## எல்-ஷடாய் - சர்வ வல்லமையுள்ள தேவன்



வேதாகமத்தில் பிதாவாகிய தேவனுக்கு பல பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று தான் எல்-ஷடாய் அதவாது **சர்வ வல்லமையுள்ள தேவன்** என்பது. சர்வ வல்லமையுள்ள தேவன் நம் முன்னோர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தினார் (யாத். 5:22). வாரலாற்றிலும், நமது அனுதின வாழ்விலும் மற்றும் நமது பணித்தளங்களிலும் இந்த சர்வல்லமையுள்ள தேவன் மகத்துவமான செயல்களை செய்து வருவதை கண்டிருக்கிறோம். எல்-ஷடாய் என்ற சர்வ வல்லமையுள்ளவர் நமக்கு எட்டாதவர் மற்றும் வல்லமையில் பெருத்தவர் என்று யோபு ஒப்புக்கொள்கிறார் (யோபு 37:23). (அ) சர்வ வல்லமையுள்ள தேவன் சகலத்தையும் செய்யக்கூடிய அதிகாரம் கொண்டிருக்கிறார் மேலும் அவருடைய நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதை தடுக்க யாராலும் முடியாது (தானி. 4:35). (ஆ) அவர் தனக்கு விருப்ப மானதைச் செய்கிறார் (சங். 115:3). "நான் தேவன் எனக்கு சமானமில்லை. எனக்கு சித்தமானவைகளை எல்லாம் செய்வேன்" (ஏசா.46:9-10). (இ) அவருடைய வல்லமை மற்ற அனைத்து வல்லமைகளையும்விட மேலானது (1 நாளா. 29:11, 12). தேவன் படைத்த சூரியன், 8,65,000 மைல் தடிமனும், பூமியை விட 1.3 மில்லியன் மடங்கு கணமும், மற்றும் 1 மில்லியன் டிகிரி செல்சியஸில் எரியும் நெருப்புமாய் உள்ளது. சூரியனை அடிவானத்திற்கு மேல் கொண்டு வரும் போது கர்த்தர் ஒவ்வொரு காலைப்பொழுதிலும் தமது வல்லமையையும், ஒவ்வொரு இரவும் வானத்தில் தம்முடைய மகத்துவத்தையும் நமக்கு காட்டி அவர் எல்லையற்ற வல்லமையுள்ளவர் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறார். அவரது வல்லமையை எதனுடனும் நாம் ஒப்பிடவே முடியாது (சங்.19). சர்வ வல்ல தேவன் பயங்கரமானவர்.

ஜார்கண்ட் மாநிலம், சாஹிப்கஞ்ச் மாவட்டத்திலுள்ள ஜோர்டிக என்ற கிராமத்தில் நமது சுதேச ஊழியர் ஒருநாள் இரவுக் கூட்டம் நடத்தச்சென்றார். பாடல்களைப் பாடி, சுவிசேஷம் அறிவித்து முடிக்க இரவு 12 மணி ஆனது. அதிகாலையில் கிராமத்தினர் சுதேச ஊழியரிடம் வந்து **நீங்கள் இரவு வேளையில் பாடல்கள் பாடியபோது எங்கள் தெய்வம் பொங்கா ஊரைவிட்டு வெளியே போய்விட்டது. மறுபடியும் எங்கள் தெய்வத்தை ஊருக்குள் கொண்டுவர ஆகும் செலவை நீங்கள் தான் கொடுக்க வேண்டும். அதுவரை நீங்கள் இங்கிருந்து செல்ல முடியாது என்று மிரட்டினார்கள்.** அப்போது நமது சுதேச ஊழியர் அவர்களிடம் **நாங்கள் பாடியப் பாட்டைக் கேட்டே உங்கள் தெய்வம் ஓடிவிட்டதென்றால், எங்கள் தெய்வம் இயேசு எவ்வளவு வல்லமையுள்ளவர் என்று இப்போது நான் உணர்ந்து கொண்டேன்** என்று தைரியமாய் பதிலளித்தார். பணத்தைக் கேட்டு மிரட்டிய கிராமத்தினர் அமைதியாக திரும்பிச் சென்றனர்.

செருபாபேலின் முன்னிருந்த சவால்கள் பர்வதம்போல் காணப்பட்டதால் தன்னால் எதுவும் செய்ய இயலாது என்று நினைத்தார். ஆனால் சர்வ வல்ல தேவன் அவரோடுகூட இருந்து முடியாதவைகளை முடியும்படி செய்தார். செருபாபேலைக் கொண்டு ஆரம்பித்த தேவ பணியைப் அவரைக் கொண்டே செய்தும் முடித்தார். எல்-ஷடாய் என்ற சர்வ வல்லமையுள்ள தேவன் நம் வாழ்வில், குடும்பத்தில், ஊழியத்தில் நம்முடன் இருப்பதால் செருபாபேல் போன்று நாமும் தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்து முடிக்க நம்மை பெலப்படுத்துவாராக! ஆமென்.

**- மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

"உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர், அவர் இரட்சிப்பார்; அவர் உன்பேரில் சந்தோஷமாய் மகிழ்ந்து, தம்முடைய அன்பினிமித்தம் அமர்ந்திருப்பார்; அவர் உன்பேரில் கெம்பீரமாய்க் களிகூருவார்."
செப்பனியா. 3:17

**கர்த்தரின் வல்லமையை விசுவாசிக்கும் கிறிஸ்தவனுக்கு அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவது என்பது முடியாததொன்றல்ல.**
– டேவிட் பிளாட்

"கர்த்தாவே, உமக்கு ஒப்பானவன் இல்லை; நீரே பெரியவர்; உமது நாமமே வல்லமையில் பெரியது."
எரேமியா 10:6

**ஆவிக்குரிய வல்லமையினால் மட்டுமே கர்த்தரின் பணியை கர்த்தர் நியமித்தபடி செய்ய முடியும்.** – ஜிம் சிம்பாலா

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

### நமது தரிசனம்

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

### நமது ஊழியம்

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.
இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
|---|---|
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...



**ச**ந்திக்கப்படாத மக்களை சந்திக்கும் இயக்கத்தின் அன்பு பங்காளர்களே!

நமது தலைமைச் செயலகத்தின் காலை நேர தியானத்தில் குழு விவாதம் வாரம் இருமுறை நடைபெறுவது வழக்கமான ஒன்று. சென்னையில் நான் இருக்கும் போதெல்லாம் இதில் ஏதாவது ஒரு குழுவில் இணைந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கும். கடந்த செப்டம்பர் திங்கள் 10-ம் தேதி காலை தியானத்தில் அப். 4:32-37 வரை உள்ள வசனங்கள் விவாதிக்கப்பட்டது. ஆதித்திருச்சபை விசுவாசிகள் எவ்வாறாக தங்களுடைய உடைமைகளை சீஷர்களின் காலடியில் சமர்ப்பித்தனர், அது எவ்வாறாக தேவையுள்ளோருக்குப் பிரித்து கொடுக்கப் பட்டது என்பது முக்கிய கருப்பொருளாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசுவாசிகளில் ஒருவருக்கும் ஒன்றும் குறைவுபடாதபடி இந்த காரியம் சிறப்பாகச் செய்யப்பட்டது. அப்.4:35&36-ல் **'நிலங் களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து, அப்போஸ்த லருடைய பாதத்திலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை.'**

இதில் எழும்பின கேள்வி என்னவெனில், இந்த காலத்தில் இது சாத்தியப்படுமா என்பதுதான். நமது இயக்கத்தின் செயல்பாடுகளும் ஏறக்குறைய இதைப் போன்றுதான் இருக்கிறது என்பது என் நினைவில் வந்தது. இயக்கத்தின் மூலம் காணிக்கைகள் பெறப்பட்டு ஊழியத் திற்கும், மிஷனெரிகளுக்கும் அவர்களது தேவைக்கேற்ப பிரித்து கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட வழியில் நமது இயக்கத்தினை வடிவமைத்த தேவனுக்கு துதியும், அவ்வாறே வேத வசனத்தின்படி வழிநடத்தி வந்த நமது முன்னோர்களுக்கு நன்றியும் கூறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**பொக்ராயன் ஆலய காரியம்:** உத்தரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பொக்ராயன் ஆலயத்தில் சில கட்டிட பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட சமயத்தில் சில மதவாதிகளின் எதிர்ப்பினால் தற்போது கட்டுமானப் பணி நிறுத்தப்பட்டுள்ளது. இந்த பிச்சனைகளுக்கு தீர்வுக் காணவும், மீண்டும் கட்டுமானப் பணிகள் துவங்கவும் முயற்சித்து வருகிறோம். அருகாமையில் அமைந்துள்ள மற்றொரு ஆலயத்தில் சிலுவையுடன் அமைக்கப்பட்டிருந்த நுழைவு வாசல் சுற்றுச்சுவருடன் இடிக்கப்பட்டுள்ளது. தேவனுடைய இடைபடுதலுக்காக ஊக்கமாய் ஜெபியுங்கள்.

**நிதி மேலாண்மைக் குழு கூடுகை:** 2023-24 ஆம் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட இயக்கத்தின் வரவு செலவு கணக்கினை ஏற்றுக்கொள்ள சிபாரிசு செய்ய, நிதி மேலாண்மைக் குழு இம்மாதம் இரண்டு முறை கூடியது.

**நமது மிஷனெரிகளின் திருமணம்:** நமது ஊழியர்கள் திரு. எபினேசர் சாமுவேல் மற்றும் செல்வி. ஜோஷ்னா ஜெயராணி இவர்களின் திருமணத்தில்

கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இருவரும் நாம் உருவாக்கிய திருச்சபையிலிருந்து ஊழியத்திற்கென தங்களை ஒப்புக்கொடுத்து வந்தவர்கள். தேவன் தாமே இவர்களுடைய குடும்ப வாழ்வினை ஆசீர்வதிப்பாராக!

**நிர்வாக குழு கூடுகை:** தேவனுடைய பெரிதான கிருபையால் ஆகஸ்ட் மாதம் 24 மற்றும் 25 தேதிகளில் நிர்வாக குழு கூடியது.

**குருத்துவ அபிஷேகக் குழு:** நமது ஊழியர்களில் தகுதியான மற்றும் அனுபவம் நிறைந்தவர்களை ஆயராக அபிஷேகம் செய்ய பரிந்துரைக்கும்படி ஆகஸ்டு 26-ம் தேதி குருத்துவ அபிஷேகக் குழுக் கூடியது.

**FES நிர்வாக குழு:** நண்பர் கல்விக் கழகத்தின் குழுக் கூட்டம் ஆகஸ்டு 26-ம் தேதி கூடினபோது, நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கென முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டது.

**குருத்துவப் பட்டமளிப்பு விழா:** கர்த்தரின் பெரிதான கிருபையினாலும் வட இந்திய திருச்சபை, குஜராத் திருமண்டலப் பேராயர் மகா கனம் சில்வான்ஸ் கிறிஸ்டியன் அவர்களின் ஆதரவினாலும் செப்டம்பர் 2-ம் தேதி நமது மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களில் 28 பேர் சூரத் திருச்சபையில் வைத்து உதவி ஆயர்களாக அபிஷேகம் பண்ணப்பட்டனர். இந்த சிறந்த உதவிக்காக குஜராத் திருமண்டலத்தின் பேராயர் அவர்களுக்கும், திருமண்டலத் தலைவர்களுக்கும் இயக்கமாக நன்றியினைத் தெரிவித்து கொள்கிறோம்.

**சத்தீஸ்கட் மாநில விஜயம்:** சத்தீஸ்கட் பிராந்திய செயலர் மற்றும் பணித்தள செயலருடன் இணைந்து கடந்த மாதம் 4 முதல் 8-ம் தேதி வரை சத்தீஸ்கர் பிராந்தியத்தில் ஊழியம் செய்யும் மிஷனெரி குடும்பங்களை சந்திக்க தேவன் கிருபை செய்தார். நமது ஊழியர்களோடு செலவழித்த நேரம் மிகுந்த பயனுள்ளதாகவும், ஆசீர்வாதமாகவும் அமைந்தது.

**கவுஹாத்தி நிகழ்வுகள்:** அரசாங்க அதிகாரிகள், தொழில் முனைவோர் மற்றும் திருச்சபையின் தலைவர்கள் கலந்து கொண்ட ஒருநாள் கூட்டம் கடந்த 14-ம் தேதி கவுஹாத்தி நகரில் நடைபெற்றது. உயர் அதிகாரிகள் அநேகர் கலந்து கொண்ட இந்த கூடுகையில் நமது இயக்கத்தினைப் பற்றி எடுத்துரைக்க ஒரு நல்ல வாய்ப்பை தேவன் உருவாக்கித் தந்தார்.

அதனை அடுத்து 15-ம் தேதி கவுஹாத்தியிலிருந்து 5 மணி நேர பயணத்திற்குப்பின் துக்ராஜார் என்கிற பகுதியில் மூன்று போடோ பாப்திஸ்ட் ஆலயங்களில் பேச வாய்ப்பு கிடைத்தது. அசோம் மாநிலத்தில் நற்செய்திப் பகரவும், அதிக மிஷனெரிகளை அப்பகுதிகளிலிருந்து பெறவும் நமது இயக்கத்திற்கும், போடோ பாப்திஸ்ட் திருச்சபைக்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாக தேவன் கிருபை பாராட்டினார்.

## அக்டோபர் மாத கீழ்கண்ட நிகழ்வுகளுக்காக ஜெபிக்க வேண்டுகிறேன்

**NIM யில் CCC பயிற்சி:** அக்டோபர் முதல் வாரத்தில் நமது தேசிய மிஷனெரி பயிற்சி மையத்தில் புதிய மிஷனெரிகளுக்கு கலாச்சாரம் கடந்த தொடர்பு பற்றி பயிற்சி கொடுக்கவிருக்கிறேன்.

**கர்நாடகா மாநில முகாம்:** அக்டோபர் 11-ம் தேதி கர்நாடகா மாநில முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. முகாமை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிக்க ஜெபித்து கொள்ளுங்கள்.

**புனே நகர முன்னேற்றப் பணி ஊழியங்கள்:** தேவனுக்குச் சித்தமானால் வரும் 12 மற்றும் 13-ம் தேதிகளில் புனே நகர் பகுதிகளில் நடைபெறவுள்ள முன்னேற்றப்பணி ஊழியங்களில் கலந்து கொள்வேன்.

**ஹுப்ளி வெள்ளி விழா கொண்டாட்டம்:** ஹுப்ளி பிராந்தியத்தில் ஊழியம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு தேவனுக்கு

நன்றி கூறும்வண்ணம் அக்டோபர் 17-ம் தேதி நடைபெறும் விழாவில் நான் கலந்து கொள்கிறேன்.

**தமிழ்நாடு மண்டல ஊழியர்கள் கூடுகை:** வரும் 23, 24-ம் தேதிகளில் நடைபெறவுள்ள கூடுகையில் தமிழ் நாடு மண்டலத்தில் பணிசெய்யும் முழு நேர ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியர்களை சந்திக்கவிருக்கிறேன்.

**மத்திய மண்டல ஊழியர்களின் ஆவிக்குரியக் கூடுகை:** மத்திய மண்டல ஊழியர்களின் ஆவிக்குரியக் கூடுகை பெரியமலையில் வரும் 25-ம் தேதி முதல் நடைபெறவுள்ளது. தேவனுக்குச் சித்தமானால் பிற தேவ தாசர்களுடன் நானும் கலந்து கொண்டு தேவ செய்தியைப் பகிரவிருக்கிறேன்.

**மிஷன் மாநாடு – டெல்லி:** வரும் 31-ம் தேதி டெல்லி மாநகரில் மிஷன் மாநாட்டில் பேச அழைக்கப்பட்டுள்ளேன்.

தேவனுடைய நோக்கத்தினை நிறைவேற்றுவதில் உங்களுடைய ஜெபம் மிகச் சிறந்த உதவியாக இருக்கும் என்பதில் எவ்வளவும் ஐயமில்லை. நாம் இணைந்து தேசத்தினை சுவிசேஷத்தால் சந்திக்க உங்களுடைய அர்ப்பணமுள்ள ஆதரவு மிகுந்த உதவியாக இருக்கும். உங்களுக்காக தொடர்ந்து ஜெபித்துகொள்கிறோம். கர்த்தர் உங்கள் அனைவரோடும் இருப்பாராக!

தேவ ஊழியத்தில் உங்கள் சக ஊழியன்



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**

# மிஷனெரி பிரதிஷ்டை



அருப்புக்கோட்டை முன்னேற்றப் பணி மாவட்டத்தின் சார்பில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு குஜராத் மிஷனெரியை 26.05.2024 அன்று ஞாயிறு ஆராதனையின் போது சித்து மூன்றடைப்பு சி.எஸ்.ஐ. தூய இம்மானுவேல் ஆலயத்தில் வைத்து Rev. R.K. பீட்டர் அவர்கள் மற்றும் Rev. D. மணிமாறன் (மிஷனெரி) இணைந்து மிஷனெரி அர்ப்பணிப்பு ஆராதனையை நடத்த கர்த்தர் கிருபை செய்தார்.



அருப்புக்கோட்டை முன்னேற்றப் பணி மாவட்டத்தின் சார்பில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு குஜராத் மிஷனெரியை 26.05.2024 நடைபெற்ற மிஷனெரி தரிசன அறைகூவல் கூடுகையில் காரியாபட்டி சி.எஸ்.ஐ. தூய பேதுரு ஆலயத்தில் வைத்து Rev. R. ஸ்டீபன் வேதராஜ் அவர்கள் மற்றும் Rev. D. மணிமாறன் (மிஷனெரி) இணைந்து மிஷனெரி அர்ப்பணிப்பு ஆராதனையை நடத்த கர்த்தர் கிருபை செய்தார். திரு. செல்வம் (காரியாபட்டி ஜெபக்குழு தலைவர்) குடும்பத்தினர் மிஷனெரிகளை ஜெபத்தினாலும், காணிக்கையினாலும் ஆதரித்து வருகின்றனர்.

விரிவுப்பணி – விருதுநகர் பணி மாவட்டம்


# பெரிய பர்வதமே நீ எம்மாத்திரம்?

இந்த ஆண்டு தேவன் நமது இயக்கத்திற்கு கொடுத்திருக்கும் கருப்பொருளான 'நான் எம்மாத்திரம்?' என்பதின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் ஆண்டவருடைய வார்த்தையை தியானித்து வருகிறோம். இம்மாதம் நாம் தியானிக்கவுள்ள தேவ வார்த்தை **"பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்; தலைக்கல்லை அவன் கொண்டுவருவான்; ..."** சகரியா 4:7. சகரியா தீர்க்கதரிசியின் மூலம் செருபாபேலுக்குக் கொடுக்கப்பட்ட இந்த வசனத்தில் பெரிய பர்வதம் என்றால் என்ன? செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய் என்று சொல்லத்தக்க அளவுக்கு அவனுக்குள் இருந்த சிறப்பு என்ன என்பதை செருபாபேல் வாழ்விலிருந்து சற்று விரிவாக தியானிப்போம்.

நாம் தேவனுடைய திட்டத்தை செயலாற்ற நினைக்கும் போது வரும் மிகப்பெரிய தடைகளை பர்வதமாகப் பார்க்கிறோம். நாம் ஆராதிக்கும் தேவன் தடைகள் மத்தியில் அவரது வார்த்தையினால் நம்மை திடப்படுத்தி, அவரது திட்டத்தை நிறைவேற்றும் வரை நம்மோடு கூட இருக்கிறார் என்பதை இந்தப் பகுதி நமக்கு தெளிவாக கற்றுக் கொடுக்கிறது. செருபாபேல் என்பதற்கு கிரேக்கப் பதத்தில் பாபிலோனில் பிறந்தவன் அல்லது பாபிலோனின் விதை என்றும், எபிரேயப் பதத்தில் பாபிலோனில் தூவப்பட்டவன் என்றும் பொருள்படும். செருபாபேல் எப்படி தேவ திட்டத்தை நிறைவேற்ற எருசலேமிலிருந்து பாபிலோனுக்குள் தூவப்பட்டாரோ அப்படியே நாமும் இந்திய தேசத்தில் தூவப்பட்டிருக்கிறோம். நாம் இந்திய தேசத்தில் தூவப்பட்டதற்கு தேவனின் நோக்கம் என்ன? என்பதை செருபாபேல் வாழ்விலிருந்து கற்றுக் கொள்வோம். நம்முடைய வாழ்வில் திட்டங்களைத் தருபவரும், அதை செயலாற்றி முடிப்பவரும் நம் சர்வ வல்லமையுள்ள தேவன்; அவர் எல்ஷடாய். அவருக்கே எல்லா துதியும் கனமும் மகிமையும் உண்டாகட்டும்.

## 1. தேவ திட்டத்திற்கு நான் எம்மாத்திரம்

சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு ஆலயம் கட்டுவதே செருபாபேலைக் குறித்து தேவனுடைய திட்டமாய் இருந்தது. அதற்கு நேராக தேவன் அவரை வழிநடத்துகிறார். பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் ஒன்றிணைந்த ராஜ்யங்களாக மூன்று



ராஜ்யங்களைப் பார்க்கிறோம். முதலாவது சவுலின் ராஜ்யம், இரண்டாவது தாவீதின் ராஜ்யம், மூன்றாவது சாலொமோனின் ராஜ்யம். இப்படி ஒன்றிணைந்த ராஜ்யங்களாக இருந்த 12 கோத்திரங்கள் ரெகொபெயாம் அரசாண்ட காலத்தில் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. பத்து கோத்திரங்கள் வடக்கு ராஜ்யமாகிய இஸ்ரவேல் எனவும், யூதா மற்றும் பெஞ்சமின் கோத்திரம் தெற்கு ராஜ்யமாகவும் பிரித்து அரசாளப்பட்டது. தேவத் திட்டத்துக்கு முரண்பாடாக அரசர்கள் செயல்பட்டதினால் இரண்டு ராஜ்யங்களுமே அடிமைத்தனத்துக்கும், சிறையிருப்புக்கும் ஒப்புக் கொடுக்கப்பட்டன.

அப்படி யூதா ராஜ்யத்திலிருந்த ஜனங்கள் பாபிலோனுக்கு சிறைப்பிடிக்கப்பட்டுப் போனக் கூட்டத்தில் செருபாபேலின் பெற்றோர்கள் இருந்தனர். செருபாபேல் பாபிலோனில் பிறந்து, தேவ பக்தியில் வளர்க்கப்பட்டு அரண்மனையில் அதிகாரியாக பணி அமர்த்தப்பட்டிருந்தான். அப்போது எருசலேமில் தேவன் தமது ஆலயத்தைக் கட்ட செருபாபேலை தேர்ந்தெடுத்தார். நாமும் நம்முடைய வாழ்வில் பல சூழ்நிலைகளை கடந்து வரும்போது அதில் தெய்வத்திட்டம் உண்டு என்பதை விசுவாசித்து செயல்படவேண்டும்.

## 2. தேவ நோக்கத்திற்கு நான் எம்மாத்திரம்

ஒவ்வொருவர் வாழ்விலும் தேவன் ஒரு பெரிய நோக்கத்தை வைத்திருக்கிறார். அதுபோல் செருபாபேல் மேலும் தேவன் தனது திட்டத்தையும், நோக்கத்தையும் வைத்துள்ளதால் 'நான் உன்னை தெரிந்து கொண்டேன், உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன்' என்று கூறுவதை ஆகாய் 2:23-ல் வாசிக்கிறோம். எஸ்றா 2:1-2-ல் பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் காலத்தில் பாபிலோன் சிறையிருப்புக்குள் 70 ஆண்டுகள் இருந்த ஜனங்களை செருபாபேல் திரும்ப எருசலேமுக்கு அழைத்துச் செல்வது மட்டுமல்லாமல் தேவனுக்காக ஆலயம் கட்டுவதும் அவனைக் குறித்து தேவனது நோக்கமாயிருந்தது. தேவன் அவனை அரண்மனையில் ஒரு அதிகாரியாக வைத்து கட்டுமானப் பணிகளின் நுணுக்கத்தையும் கற்றுக் கொடுத்து அவனை உருவாக்குவது தேவனுடைய நோக்கமாய் இருந்தது. சிறையிருப்பில் இருந்து கொண்டே தேவனுக்காக சிறந்ததைச் செய்ய திட்டமிட்டுக் கொண்டே இருந்த செருபாபேலை தேவன் ஆலயம் கட்ட தெரிந்து கொண்டார். நாம் எந்த சூழ்நிலையில் இருந்தாலும் செருபாபேல் போல் தேவத் திட்டத்துக்கும் நோக்கத்துக்கும் நம்மை ஒப்புக்கொடுப்போம். அப்போது தேவன் நம் மூலம் செய்யவேண்டிய காரியங்களை செய்து முடிப்பார்.

## 3. தேவன் செயல்படுத்த நான் எம்மாத்திரம்

திட்டங்களையும், நோக்கங்களையும் நம் மேல் வைக்கும் தேவன் நம்மோடு கூட இருந்து செயல்படுகிறவர். 70 ஆண்டுகளுக்கு பின் எரேமியா தீர்க்கதரிசி மூலம் தேவன் வாக்குப் பண்ணினதை நிறைவேற்ற பெர்சியாவின் ராஜாவாகிய கோரேசின் ஆவியை ஏவுகிறதைப் பார்க்கிறோம் (எஸ்றா 1:1). தேவனுடைய ஆலயத்தைக் கட்ட தேசத்தை அரசாளும் ராஜாவிடமிருந்து கட்டளை பிறப்பதைப் பார்க்கிறோம் (எஸ்றா 1:3-5). தேவனாகிய கர்த்தருக்கு ஆலயத்தை கட்ட போகவும், போகாதவர்கள் தேவனுடைய ஆலயத்தைக் கட்ட உற்சாகத்துடன் கொடுக்கவும் கட்டளையிடுகிறார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் **போ அல்லது அனுப்பு** என்ற தாரக மந்திரமும் இந்த வசனத்தின் அடிப்படையிலே உருவானது. ஒன்று தேவனுடைய பணிக்கு புறப்பட்டுச் செல்ல வேண்டும் அல்லது புறப்பட்டுச் செல்வோரை ஜெபத்தாலும், ஈகையினாலும் தாங்க

வேண்டும் என அழைக்கப்படுகிறோம். தேவ திட்டத்தில் பணி செய்யும் எவரும் இது என்னாலே உருவானது என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. திட்டமும் நோக்கமும் தந்தவர் அதை செயலாற்றவும் செய்கிறார்.

## 4. சர்வ வல்லவருக்கு ஆலயம் கட்ட நான் எம்மாத்திரம்

செருபாபேலுக்கு பாபிலோனின் கல்வி, கட்டிடக்கலை, திறமைகள், சிறந்த அனுபவம், உயர் பதவி அனைத்தும் கிடைத்தது அரண்மனையில் சுகபோகமாய் இருக்க அல்ல என்பதை செருபாபேல் நன்கு அறிந்திருந்தான். **பரமன் பேரிலே பற்றுக்கொண்டோரெல்லாம் எளிதில் புரிவார் அவரின் பாரத்தை** என்ற பாடலுக் கேற்ப அவனுக்குள் என் தேசம், என் ஜனம், என் தேவனுடைய ஆலயம் பாழாக கிடக்கிறதே என்ற ஏக்கமும், பாரமும்தான் இருந்தது. பாபிலோன் அரண்மனையில் உயர் பதவிக்கு ஆள் தேர்ந்தெடுக்கும் போது ஒரு கேள்வியை அரண்மனை அதிகாரிகளிடம் கேட்பார்கள். கேள்விக்கு சரியான பதில் அளிப்பவர்களுக்கு உயர் பதவிகளைக் கொடுப்பது ராஜாவின் வழக்கம். அதேப் போன்று பாபிலோனில் செருபாபேலுக்கும் அரண்மனையிலுள்ள சக அதிகாரிகளுக்கும் ஒரு போட்டி நடைபெற்றது. செருபாபேல் அந்தப் போட்டியில் ஜெயித்த போது அவருக்கு உயர்ந்த பதவியும் அரியணையும் கிடைத்தது என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

## தேவ திட்டத்தில் செருபாபேல்

செருபாபேல், யூதாவுக்கு கவர்ன ராகும் பொறுப்பை எனக்கு தாருங்கள் என்று கேட்டான். அரண்மனையில் சுகபோகமாய் இருந்து அதிகாரம் பண்ண விரும்பாமல் மாறாக தேவத் திட்டத்தை நிறைவேற்ற விரும்பினார். வசதியில்லாத பாழடைந்த தன் தேசத்தின் தேவையறிந்து, தேவனுடைய ஆலயத்தைக் கட்டிட தன்னை ஒப்புக் கொடுக்கிறான். சுகஜீவிகளாய் சுகபோகமான வாழ்வை விடுத்து தெய்வத்திட்டத்தை நிறைவேற்ற புறப்படும் செருபாபேல்கள் இன்றைய அவசரத் தேவை. வட இந்தியா சென்று தேவ ராஜ்யத்தைக் கட்டிட தம் பிள்ளைகளை அனுப்பிடும் பெற்றோர்களே இன்றைய தேவை. தேவ ஆலயத்தைக் கட்டிட யூதாவின் கவர்னராக, அரசாங்க பிரதி நிதியாக ஆண்டவருக்குப் பணி செய்ய புறப்பட்டுச் சென்றான். செருபாபேல் ஆலய கட்டுமான பணிகளுக்கு தேவையான அனைத்தையும் அரசாங்க கஜானாவிலிருந்தே பெற்றுச் செல்லும் அளவுக்கு செல்வாக்கு நிறைந்தவனாக காணப்பட்டான். இத்தனை தூரத்துக்கு அவன் தன்னை அர்ப்பணிக்க காரணம் என்னவென்று பார்ப்போம்.

## தேவ வார்த்தையில் செருபாபேல்

அரண்மனை, அரியனை, அதிகாரம் அத்தனையும் விட்டுவிட்டு அர்ப்பணத் தோடு புறப்பட்டுச் செல்ல மிக முக்கிய மான காரணம் அவன் தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருந்ததே ஆகும். அரண்மனையில் இருந்தாலும் ஆண்டவரின் பாரம் அவனுக்குள் இருந்தது. தேவனுடைய ஆலயத்தைக் கட்ட தேவன் அவனை தெரிந்தெடுத்தபோது, சாலொமோன் கட்டின ஆலயத்தின் பணி முட்டுகளைக் குறித்தும், அவர் பயன் படுத்திய கல் தச்சர்கள், கேதுரு மரங்கள் யாவையும் குறித்த விவரங்களையும் அறிந்திருந்தான். இத்தனை காரியங் களையும் அவனுடைய பெற்றோர்கள் தெளிவாக கற்றுக் கொடுத்திருக்க கூடும். உபா. 6:4-7-ல் செருபாபேலின் பெற்றோர்கள் மிகவும் சிறப்பாக வளர்த் திருக்கிறார்கள். செருபாபேலின் பெற்றோர் போல் நாமும் நம்முடைய பிள்ளைகளை வளர்க்க அர்ப்பணிப்போம்.

## தேவ ஆலயத்தைக் கட்டிடும் செருபாபேல்

ஆகாய் 1:12-ல் செருபாபேல் மற்றும் அவனோடு கூட இருந்தவர்கள் தேவனுடைய வார்த்தைக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவி கொடுத்து கீழ்ப்படிந்தார்கள். தேவ சத்தத்திற்கும், தேவ சித்தத்திற்கும் ஒப்புக்கொடுப்பவர்களை மட்டுமே தேவன் சிறப்பாக பயன்படுத்த முடியும். செருபாபேல் பாபிலோனில் பெற்ற தன் அனுபவம், படிப்பு, திறமை ஆகியவைகளைக் கொண்டு செயல்படாதபடி கர்த்தரையே நம்பி செயல்படுகிறான். தேவனுடைய ஆலயத்தை கட்ட நாங்களும் வருகிறோம் என்ற எதிரி கூட்டத்தோடு சமரசமாகாமல் உங்களுக்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என்று கூறி தேவப் பணியை கலப்படமில்லாமல் செய்தார் (சக. 4:1-3). எதிரிகளால் இரண்டு ஆண்டுகள் தேவப்பணி தடைப்பட்டாலும் தேவனும் தேவனுடைய தீர்க்கதரிசிகளும் திடன் சொல்ல அவனோடுகூட இருந்தனர். அதையே இந்த மாத தலைப்பில் சக. 4:7-ல் வாசிக்கிறோம். பெரிய பருவதமே நீ எம்மாத்திரம். செருபாபேலுக்கு முன்பாக நீ ஒன்றுமில்லாமல் போவாய் என்று வசனத்தினால் உற்சாகப்படுத்தப் படுவதையும் பார்க்கிறோம். நாம் தெய்வத்திட்டத்தின் அடிப்படையில் வாழும் போது தேவன் நம் பக்கத்தில் இருந்து தடைகளை மாற்றுவார். தேவ பணியில் அழைக்கப்பட்டவர்களாகிய நாமும் தேவ வார்த்தையின் அடிப்படையில் உண்மையும் உத்தமமாக அவரது பணியை நிறைவேற்றுவோம்.

## தேவ பணியை நிறைவேற்றும் செருபாபேல்

கர்த்தருடைய பணியை நிறைவேற்ற அர்ப்பணித்த செருபாபேல் எதற்காக பிடிக்கப்பட்டானோ அதை செய்து முடிக்கும்வரை ஓய்ந்துவிடவில்லை. செருபாபேல் தலைக்கல்லை கொண்டு வருவான் என்று சக. 4:7-ல் வாசிக்கிறோம். தலைக்கல் என்பது தேவப் பணியின் நிறைவை குறிக்கிறது. ஆலயத்திற்கு அஸ்திபாரம் போட்ட செருபாபேலின் கைகளே அதை செய்து முடிக்கும் என்று சக. 4:9-ல் வாசிக்கிறோம். தேவனுடைய பணியை அர்ப்பணத்தோடு செருபாபேல் செய்ததால் மத்.1:13 கிறிஸ்துவின் பிறப்பின் பட்டியலில் செருபாபேலின் சந்ததியிலே உலகை ஆளும் இரட்சகர் பிறந்தார் என வாசிக்கிறோம்.

சாலொமோன் கட்டின முதலாம் ஆலயம் தகர்க்கப்பட்டு பாழாய்க் கிடக்கும் போது அரண்மனையில் இருக்க முடியாமல் தேவ சத்தத்திற்கும், சித்தத்திற்கும் தன்னை ஒப்புக்கொடுத்து, புறப்பட்ட நாள் முதல் கொடுக்கப்பட்ட பணியை உண்மையாய் நிறைவேற்றினான் செருபாபேல். எருசலேமில் செருபாபேல் கட்டிய ஆலயம் இன்று இடிக்கப்பட்டுவிட்டது. அந்த ஆலயத்தை மீண்டும் கட்ட இஸ்ரவேல் ஜனங்கள் இன்றும் போராடிக்கொண்டே இருக்கின்றனர். ஆலயம் கட்ட அனைத்து பணிமுட்டுகளும் தயார் நிலையில் இருப்பதால் யூதர்கள் ஆலயமாகிய கட்டிடத்தை கட்டி முடிப்பார்கள். 1 கொரி. 3:16,17-ல் தேவன் தங்கும் ஆலயம் நமது சரீரம் என வாசிக்கிறோம். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவருடைய பிள்ளைகளாக அழைக்கப்பட்ட அனைவரும் மிஷனெரிகள். இயேசுவின் அன்பினை அறியாத அனைத்து உள்ளங்களையும் கர்த்தருடைய ஆலயமாக மாற்றிடும் மாதூய பணியை நமது கரத்தில் தேவன் கொடுத்திருக்கிறார். ஆகவே நாம் நடமாடும் நிருபங்களாக மாறுவோம். நடமாடும் திருச்சபைகளை நிலை நிறுத்துவோம். செருபாபேலுக்கு உதவின அதே கர்த்தர் நமக்கும் உதவுவாராக! ஆமென்.

**திரு. V. செந்தில் முருகன் செல்வின்**
(தொடர்புத் துறை - ஆடியோ, வீடியோ)


# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஜெபப்பிரிவு

## பணித்தள விஜயம் செல்லும் குழுக்கள்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் ஒவ்வொரு மாவட்டத்திற்கென்று ஜெபித்துத் தாங்குவதற்கென தரப்பட்டுள்ள மாநிலங்களுக்காக ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தில் குறிப்பாக ஜெபித்து வருகிறோம். ஒவ்வொரு மாவட்டமும் தங்களுக்குத் தரப்பட்டுள்ள மாநிலங்களிலுள்ள பணித்தளங்களுக்கு குழுவாகச் சென்று அங்குள்ள மிஷனெரிகளோடு இணைந்து ஜெபித்து வருகின்றனர். இந்த ஆண்டிலும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து புறப்பட்டுச் செல்லும் குழுக்களின் பட்டியலைத் தந்துள்ளோம். ஒவ்வொரு குழுவிலும் பயணம் செய்யும் நபர்களுக்காக நன்றி செலுத்தி அவர்களின் சரீர, சுக பெலனுக்காகவும், பிரயாணப் பாதுகாப்பிற்காகவும் பணித்தள விஜயங்கள் மற்றும் ஜெபநாட்கள் அவர்களுக்கு ஆசீர்வாதமாகவும் உற்சாகத்தைத் தருவதாகவும் அமைய ஜெபிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

| வ எண் | பணித்தள விஜய நாட்கள் | பயணக்குழு | நபர்கள் | விஜயம் செய்யும் மாநிலங்கள் |
|---|---|---|---|---|
| 1. | செப் 28- அக் 1 | விழுப்புரம் | 23 | மஹாராஷ்டிரா |
| 2. | செப் 28- அக் 4 | சோழிங்கநல்லூர் | 14 | ஹிமாச்சலப் பிரதேசம் |
| 3. | செப் 30- அக் 5 | சந்தோஷபுரம் | 9 | ஜார்கண்ட் |
| 4. | அக் 2-8 | திருநின்றவூர் வாலிபர்கள் | 21 | மத்தியப் பிரதேசம் |
| 5. | அக் 2-9 | தண்டையார்பேட்டை | 12 | ராஜஸ்தான் |
| 6. | அக் 5-7 | அம்பத்தூர், சென்னை | 3 | சத்தீஸ்கர் |
| 7. | அக் 8 - 14 | வாலிபர் பிரிவு, சென்னை | 32 | ஜார்கண்ட் |
| 8. | அக் 8-16 | பட்டாபிராம் தெற்கு | 27 | பஞ்சாப் |
| 9. | அக் 9-14 | மேட்டுப்பாளையம் | 22 | ஜார்கண்ட் |
| 10. | அக் 9-16 | பாண்டிச்சேரி | 17 | ஒரிசா |
| 11. | அக் 11-14 | பெரம்பூர், சென்னை | 2 | ராஜஸ்தான் |
| 12. | அக் 10-14 | தாம்பரம் | 10 | சத்தீஸ்கர் |
| 13. | அக் 10-20 | திண்டுக்கல் | 13 | ஹிமாச்சலப் பிரதேசம் |
| 14. | அக் 11-20 | வண்ணாரப்பேட்டை, சென்னை | 17 | ஜார்கண்ட் |
| 15. | அக் 11 - 13 | கொளத்தூர் வாலிபர்கள், சென்னை | 14 | கர்நாடகா |
| 16. | அக் 14 - 22 | மதுரை | 19 | ஜம்மு |
| 17. | அக் 16 - 27 | நெல்லை தெற்கு | 12 | உத்திரப்பிரதேசம் & ஹிமாச்சலப்பிரதேசம் |
| 18. | அக் 24-29 | போரூர், சென்னை | 13 | அஸ்ஸாம் |
| 19. | அக் 20 - 23 | ராயப்பேட்டை, சென்னை | 11 | கர்நாடகா |
| 20. | அக் 25 - 30 | நந்தியால், ஆந்திரா | 12 | ஜார்கண்ட் |
| 21. | அக் 30 - நவம் 4 | கொரட்டூர், சென்னை | 11 | மஹாராஷ்டிரா |
| 22. | அக் 30 - நவம் 4 | செக்கந்திராபாத் | 13 | ஒரிசா |

# வாழ்த்துகிறோம்



ஆற்காடு லுத்தரன் பேராயத்தின் 9-வது பேராயராக மாமறை திரு. அறிவர் டி. பீட்டர் பால் தாமஸ் அவர்கள் 24.08.2024 அன்று திருநிலை படுத்தப்பட்டுள்ளார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு குடும்பமாக அவர்களை வாழ்த்துகிறோம். மேலும் இவர்கள் காலத்தில் திருச்சபைகள் ஆவிக்குரிய மற்றும் மிஷனெரி ஊழியங்களில் வளர்ந்து பெருக ஜெபிக்கிறோம்.

## திருவள்ளூர் பிராந்தியம் நடத்தும் மிஷனெரி தரிசன குடும்பக் கூடுகை 2024

இடம்: I.V.R. திருமண மண்டபம்,
ஆயில்மில், திருவள்ளூர்
நாள்: 02.10.2024 புதன்கிழமை
காலை 9.00 மணி முதல்
மாலை 4.00 மணி வரை

செய்தியாளர்கள்:
**Rev. ரூபன் சாமுவேல்,** மிஷனெரி FMPB
**திருமதி. மரகதமணி ரூபன்,** மிஷனெரி FMPB

தொடர்புக்கு: 9894405442 / 8248976864 / 9710751782

# மிஷனெரி பிரதிஷ்டை



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு விழுப்புரம் பணி மாவட்டத்தின் மூலம் ஆதரிக்கப்பட்டு வரும் 6 மிஷனெரிகள் 08.09.2024 அன்று விழுப்புரம் தமிழ் இவாஞ்சலிக்கல் லுத்தரன் ஆலயத்தில் வைத்து அருட்திரு. இராபர்ட் வில்லியம் தாமஸ் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். இந்த ஆராதனையில் அருட்திரு. டேனியல் தாமஸ் அவர்கள் தேவ செய்தியை கொடுத்தார். டாக்டர். பி. மலர்ராஜ், திரு. பி. விவேக்ராஜ், திரு. பி. ஐசக்ராஜ், டாக்டர். பி. ரெனித்தா, திரு. ஆர்.கே. ஜெபராஜ் & திரு. ஆர்.கே. ஆனந்தராஜ் மற்றும் திரு. கே. காட்வின் குடும்பத்தினர் மிஷனெரிகளை ஜெபத்தினாலும், காணிக்கையினாலும் ஆதரித்து வருகின்றனர். மிஷனெரிகளையும், தாங்கும் குடும்பங்களையும் நம் ஜெபத்தில் நினைவுக் கூறுவோம். தேவ நாமம் மகிமைப்படுவதாக!

**திரு. ரூபன்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – விழுப்புரம்

# கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள்



திருநெல்வேலி மாவட்டம், பெருமாள்புரம் பகுதி திரு. மனுவேல் ஜான் மகிமைராஜ் அண்ணன் அவர்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுத் தலைவராக 1989-ம் ஆண்டு முதல் சிறப்பாக பணியாற்றியவர்கள். கடந்த 12.08.2024 அன்று தனது 75-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். அண்ணன் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர்கள். திருமதி. சுந்தரிபாய் மகிமைராஜ் அக்கா அவர்கள் தலைமை செவிலியராக பணியாற்றி ஓய்வுப் பெற்றவர்கள். குடும்பமாக இப்பகுதியில் தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டுவதில் தோள் கொடுக்கிறவர்கள். அக்காவின் ஆறுதலுக்காகவும், பிள்ளைகள் திருமதி. பெரில், திருமதி. பெனிடிக்டா மற்றும் திரு. பிரிசிலா ராஜன் ஆகியோரின் குடும்பங்களின் ஆறுதலுக்காகவும் ஜெபிப்போம்.

**J. செல்வராஜ்,** கௌரவ விரிவுப்பணி செயலர்-மத்திய நெல்லை.

## மதுரை பெண்கள் கூடுகை 2024

இடம்: GJ ஆடிட்டோரியம், லேடி டோக் கல்லூரி, நரிமேடு, மதுரை - 2

நாள்: 02.10.2024 புதன் கிழமை காலை 9.30 மணி முதல் 4.30 மணி வரை

செய்தியாளர்: **திருமதி. விஜயராணி ஆல்பின்,** FMPB

பணித்தள பகிர்வு: **திருமதி. ஜெபரோஸ் விஜயன்,** FMPB மற்றும் **பணித்தள விசுவாசிகளின் கலாச்சார நிகழ்வுகள்**

தொடர்புக்கு: 9843137355 / 9444899301

## திருவள்ளூர் மண்டலம்
## 36-வது விசுவாச மகளிரின் அழகிய மாநாடு - 2024

இடம்: ஜெய கிறிஸ் மஹால், தெற்கு பஜார், பட்டாபிராம், சென்னை - 72

நாள்: 31.10.2024 வியாழக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை (தீபாவளி விடுமுறை நாள்)

சிறப்பு அழைப்பாளர்: **Rev. K. பிரான்சிஸ் தேவகுமார்,** குருசேகர தலைவைர், C.S.I. தண்டுரை

செய்தியாளர்: **திருமதி. ஜான்சி,** (கேரளா)

பணித்தள பகிர்வு: **திருமதி. நகோமி,** FMPB (ஜார்கண்ட்)

தொடர்புக்கு: FMPB Thiruvallur Zonal Office, 044-26852200

## வேலூர் பணி மாவட்டம்

# வாலிபர் கூடுகை 2024

இடம்: C.S.I. கிறிஸ்து ஆலயம், காந்திநகர்.

நாள்: 02.10.2024 காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

செய்தி: **Dr. சாம் டேனியல்,** சென்னை

தொடர்புக்கு: **Rev. S. அசரியா ராஜ்குமார்** – 9789638750

## தென் நெல்லை பிராந்தியம் நடத்தும்

# கிதியோனியர் முகாம் 2024

இடம்: ஹைடெக் பாலிடெக்னிக் கல்லூரி, சமூகரெங்கபுரம்
(சமுகை–ராதாபுரம் சாலை)

நாள்: 11.10.2024 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல்
12.10.2024 சனிக்கிழமை மாலை 7.00 மணி வரை

செய்தியாளர்கள்: **Rev. V.T. ஜாண்சன்,** மதுரை
**Rev. D. பால் சாலமோன்,** FMPB சென்னை
**Rev. S. இம்மானுவேல் ரஞ்சித்சிங்,** FMPB சென்னை
**Rev. M. ஜாண்,** FMPB பீஹார்
**Rev. G. கிங்ஸ்லி,** FMPB திருநெல்வேலி

தொடர்புக்கு: 9944446437, 9443054701, 7639656577

## தூத்துக்குடி வட பிராந்தியம் – வாலிபர் பிரிவு நடத்தும்

# 1000 வாலிபர் கூடுகை

இடம்: ரூபவதி திருமண மண்டபம், மில்லர்புரம், தூத்துக்குடி

நாள்: 12.10.2024 சனிக்கிழமை காலை 9 மணி முதல்
மாலை 4.30 மணி வரை

செய்தியாளர்கள்:
**Rev. S. இம்மானுவேல் ரஞ்சித்சிங்,** FMPB சென்னை
**சகோதரி. வசந்தி இம்மானுவேல்**
**Rev. J. டேனியல் அருள்மணி,** வாலிபர் பிரிவு, FMPB சென்னை

பணித்தள பகிர்வு: **சகோ. S. ஹென்றி சாலமோன்,** FMPB குஜராத்

தொடர்புக்கு: **Rev. I. மெயின்ராஜ்** – 9443694021

## கே.கே. நகர் பிராந்தியம்

# ஸ்கேன் மற்றும் அங்கத்தினர்கள் குடும்பக் கூடுகை 2024

இடம்: கோயில் பிள்ளை மேட்ரிக் மேல் நிலைப் பள்ளி, ராயலா நகர், ராமாபுரம், சென்னை – 89

நாள்: 27.10.2024 ஞாயிறு மாலை 4.30 மணி

செய்தியாளர்: **Rev. V.T. ஜாண்சன்,** மதுரை

பணித்தள பகிர்வு: **Rev. பால் தயாசிங்,** FMPB

தொடர்புக்கு: 9444210711 / 9444329829

## கருங்கல் பணிமாவட்டம்

# மிஷனெரி தரிசன குடும்பக் கூடுகை 2024

இடம்: CSI கஸ்பா சபை, கருங்கல்

நாள்: 31.10.2024 வியாழக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை (அரசு விடுமுறை நாள்)

செய்தியாளர்: **Rev. K. பிரபாகர சாரதி,** FMPB, சென்னை.

**திரு. J. ரூபன்ராய்,** நெல்லை

பணித்தள பகிர்வு: **சகோ. M. வினு** FMPB, மஹாராஷ்டிரா

## தமிழ்நாடு மண்டலம் நடத்தும்

# வாலிபர் முகாம்

நாள்: 31.10.2024 வியாழன் முதல் 02.11.2024 சனி வரை

இடம்: யெகோவாயீரே வளாகம், பெரியமலை

செய்தியாளர்: **திரு. Y. நவநீதர்**

**திருமதி. வசந்தி இம்மானுவேல், சகோ. மைக்கேல்**

**Rev. பால் தயாசிங்** மற்றும் **FMPB வாலிபர் பிரிவு**

தொடர்பு: 9741885571 / 9787096914 / 9363367535

# பத்லி தாபர் திருச்சபை வரலாறு

**பதேகாபாத் பணித்தளம், ஹரியானா மாநிலம் – வட மண்டலம்**



*எழுதியவர்:* **திருமதி. டி. ஆக்னஸ் எட்வர்ட்**

## பொதுவான தகவல்கள்

பத்லி தாபர் கிராமம் ஹரியானா மாநிலத்தின் சிர்சா மாவட்டத்தில் உள்ளது. இது ஹிசார் பிரிவுக்கு சொந்தமானது. 2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பத்லி தாபர் கிராமத்தில் மொத்தம் 840 குடும்பங்கள் வசிக்கின்றனர். இவர்களின் கல்வியறிவு 73.7% ஆகும். இந்திய அரசியல் அமைப்பு மற்றும் பஞ்சாயத்ராஜ் சட்டத்தின்படி, கிராமத்தின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சர்பஞ்ச்-ஆல் பத்லி தாபர் கிராமம் நிர்வகிக்கப்படுகிறது.

## ஆரம்பம்

ஹரியானா மாநிலத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் பணித்தளம் சிர்சா ஆகும். இது மிஷனெரிகளான திரு. ஜேம்ஸ் கெய்சர் ஓசன்னா மற்றும் திரு. டி. அந்தோனி ஆகியோரால் 1974-ம் ஆண்டு திறக்கப்பட்டது. திரு. டி. அந்தோனி ஏப்ரல் 1977-ல் சிர்சா பணித்தளத்தை விட்டு சென்ற பிறகு திரு. எஸ். ராஜேந்திரன் அவர்கள் சிர்சா பணித்தளத்திற்கு வந்தார். திரு. ஜேம்ஸ் கெய்சர் மற்றும் திரு. எஸ். ராஜேந்திரன் ஆகியோர் சிவில் மருத்துவ மனையில் பணிபுரிந்த பதேகாபாத்-ஐ சேர்ந்த திருமதி. பிரகாஷ் சந்த் என்ற கிறிஸ்தவ பஞ்சாபி செவிலியர் உதவியுடன் 1979-ல் பதேகாபாத்தில் ஊழியத்தைத் தொடங்கினர். பதேகாபாத் பணித்தளம் 1983-ல் திறக்கப்பட்டு, திரு. ஜாய் குட்டி & திருமதி. ரோசம்மா ஆகியோர் முன்னோடி மிஷனெரிகளாக நியமிக்கப்பட்டனர். பின் நாட்களில் இவர்கள் மூலம் தரியாபூரில் ஆலயம் கட்டப்பட்டது.

1997 செப்டம்பர்-ல் பதேகாபாத் மிஷனெரிகளான திரு. ஜான் பாலசிங் மற்றும் திரு. சாலமோன் சண்முகம் குடும்பத்தினருக்கு தரியாபூர் ஆலய விசுவாசி ஒருவரின் மூலம் பத்லிதாபர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சுர்ஜீத் குடும்பத்தினரின் தொடர்பு கிடைத்தது. பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்த திரு. சுர்ஜித்தின் 8 வயது மகளுக்காக ஊழியர்கள் ஜெபித்த போது தேவன் விடுதலையைக் கட்டளையிடவே, அக்குடும்பம் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து தங்கள் வீட்டிலிருந்த விக்கிரக சிலைகளை அகற்றிவிட்டு 28.09.1997 அன்று குடும்பமாய் ஞானஸ்நானம் பெற்றனர். திரு. சுர்ஜித் குடும்பத்திற்கு பிறகு திரு. ஆத்மராமின் குடும்பத்தினர்

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு 19.10.1997-ல் ஞானஸ்நானம் பெற்றனர்.

மிஷனெரி திருமதி. ஷீலா சண்முகம் மற்றும் சுதேச ஊழியர் திருமதி. கமலேஷ் ஆகியோர் திரு. ஆத்மராமின் உதவியுடன் பக்குவாலியில் வசிக்கும் திருமதி. குட்டி என்பவருக்கு சுவிசேஷம் அறிவித்து அங்கு ஜெபக்கூட்டங்களை நடத்தினர். பக்குவாலியில் மிஷனெரி திரு. சாலமோன் சண்முகம் அவர்களால் திரைப்பட ஊழியம் மூலம் நற்செய்தி பல கிராமங்களில் அறிவிக்கப்பட்டது. தேவன் அற்புதங்களை செய்து ஊழியம் விரிவடையும்படி செய்தார்.

### ஆலய மூப்பரான திரு. தேவிலால் அவர்களது சாட்சி:

நான் பத்லி தாபரைச் சேர்ந்த தேவிலால், விக்கிரக வழிபாடு செய்த எங்கள் குடும்பத்தில் வறுமை, வியாதி, நிம்மதி யின்மை, வியாபாரத்தில் நஷ்டம், விவசாயத்தில் சரியான அறுவடையில் லாமை ஆகியவற்றால் சமாதானமின்றி தவித்த சமயத்தில், தரியாபூரிலிருந்து சுவிசேஷம் அறிவிக்க வந்த திருமதி. ஷீலா சண்முகம் மற்றும் திருமதி. கமலேஷ் ஆகியோர் மூலம் எங்கள் குடும்பப் பெண்கள் கிறிஸ்துவை விசுவாசித்தனர். அசுத்தாவியின் தொல்லை யால் இரவு முழுவதும் தூங்காமல் அழுது கொண்டிருந்த என் மகனுக்கு ஊழியர்கள் ஜெபித்தபோது தேவன் சுக மருளினார். எனவே நானும் தேவனை விசுவாசித்து தரியாபூரில் நடைபெற்று வந்த ஆராதனையில் கலந்து கொண்டு 13.03.2000 அன்று குடும்பமாய் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டோம். நாங்கள் எங்கள் கிராம மக்களுக்காக ஜெபித்து சுவிசேஷம் அறிவித்த போது 25 குடும்பங்களுக்கும் மேற்பட்டவர்கள் தேவனை ஏற்றுக்கொண்டு விசுவாசித்தனர்.

**திருமதி. ராஜ்:** என் கணவர் காச நோயினாலும், என் தலையில் புற்று நோய் கட்டியினாலும் நாங்கள் அவதிப்பட்டு வந்தோம். கிறிஸ்தவளான எனது அண்ணி எங்களை ஆலய ஆராதனைக்கு அழைத்துச் சென்றார். அங்கு ஏறெடுக்கப்பட்ட ஜெபத்தின் மூலம் தேவன் எங்களை முழுமை யாக குணப்படுத்தியதால் நாங்கள் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு எங்கள் உறவினர்களுக்கும் சுவிசேஷம் அறிவித்தோம். அவர்களும் இப்போது விசுவாசத்தில் இருக்கிறார்கள்.

**திரு. பூப்சிங்:** கன்வர்புரா கிராமத்தைச் சேர்ந்த எனது குடும்பம் 24 ஆண்டுகளாக அசுத்தாவியின் பிடியினாலும், வியாதி யினாலும் அவதிப்பட்டு சம்பாத்தியம் அனைத்தையும் மந்திரவாதிகளுக்கு செலவழித்தும் விடுதலையின்றி தவித்து வந்தோம். இந்நிலையில் எனது உறவினரான திரு. தேவிலால் எங்களுக்கு சுவிசேஷம் அறிவித்து ஜெபித்த போது தேவன் பூரண சுகமருளி னார். நாங்கள் தேவனை விசுவாசித்து 20.12.2016 அன்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம். எங்கள் ஜெபத்தின் மூலம் தேவன் அநேக அற்புதங்களை செய்தார். இதன் மூலம் அநேகர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தனர்.

## அற்புதங்கள்

பத்லிதாபர் கிராம விசுவாசி திரு. மங்காராமின் சிறுநீரகக் குழாயிலிருந்த 8 மி.மீ. கல் அறுவை சிகிச்சை மூலம் நீக்கப்பட வேண்டிய நிலையில், ஜெபத்தின் மூலம் மருத்துவர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் சிறுநீர் மூலம் இந்த கல் வெளிவர கர்த்தர் கிருபை செய்தார்.

## ஆராதனை

ஆரம்பத்தில் பத்லிதாபர் விசுவாசிகள் ஞானஸ்நானம் பெற்று தரியாபூர் ஆலய ஆராதனையில் கலந்து கொண்டனர். 1998 முதல் பத்லி தாபர் கிராமத்தில் ஞாயிறு ஆராதனையானது விசுவாசி

திரு. நஜரின் வீட்டில் மிஷனெரி திரு. பிபாபா பானியால் நடத்தப்பட்டது. 2012 டிசம்பரில் ஆலயம் கட்ட வாங்கிய நிலத்தில் ஒரு அறை இருந்ததால் அங்கு வைத்து ஆராதனை நடத்தப்பட்டது. ஆலயக் கட்டு மானம் நிறுத்தப்பட்ட பின்பும், 2016-ல் தொடர்ந்து ஆலயம் கட்டி முடிக்கப்படும் வரையும் அதே இடத்தில் ஆராதனை நடைபெற்றது.

## ஆலயம் கட்ட நிலம்

ஆலயத்தின் நிலம் ரூ.6,30,000க்கு வாங்கப்பட்டது. நிலத்தின் அளவு 4083.75 சதுர அடி ஆகும். திரு. அலியாக்கிம் ஜெனா பணித்தள மிஷனெரியாகவும், திரு. ராஜா எட்வின் மோசஸ் ஹரியானா பிராந்திய செயலாளராகவும் இருந்தபோது 08.12.2011 அன்று ஆலயத்திற்கான நிலம் வாங்கப்பட்டது.

## திருச்சபை அங்கத்தினர்கள்

பத்லி தாபர் ஆலய அங்கத்தினர்கள் பக்குவாலி, டிங்ரோடு, ஷெர்புரா, பத்லிதாபர், கன்வர்புரா மற்றும் குசும்பி கிராமங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பால்முகி, சமார், மஜ்பி சீக் மற்றும் ஓட் ராஜ்புத் சமுகத்தைச் சேர்ந்தவர்கள்.

## எதிர்ப்பு மற்றும் ஆலய இடிப்பு

பத்லி தாபர் ஆலயக் கட்டுமானப்பணி 11.07.2012 அன்று தொடங்கப்பட்டது. கட்டுமானப் பணியின்போது கிராமத்தினர் கடும் எதிர்ப்பு தெரிவித்ததோடு சுமார் 150 பேர் வந்து தூண்களை உடைத்து, அஸ்திபாரத்தை சேதப்படுத்தி, அங்கிருந்த கட்டுமானப் பொருட்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றனர். பின்னர் கிறிஸ்தவர்கள் கட்டாய மதமாற்றம் செய்கிறார்கள் என்று பொய் வழக்கு பதிவு செய்தனர். தமிழகத்தைச் சேர்ந்த சிர்சா மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலாலும் எப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டது. விசுவாசிகளின் கண்ணீர் ஜெபத்தினாலும், ஜெபக்குழு ஆதரவாளர்களின் ஊக்கமான ஜெபத்தினாலும் எதிர்ப்பாளர்களின் பலம் குறைந்து இறுதியாக கிராமத் தலைவர் திரு. அனுமன்சிங் மட்டுமே விசுவாசிகளுக்கு எதிராக நின்றார். இரண்டு ஆண்டுகள் வரை தொடர்ந்த இவ்வழக்கு முடிவில் சமரசம் செய்யப்பட்டது.

## ஆலயக் கட்டுமானம்

ஆலயத்தின் பெயர் **பிரபு ஈசு மஸிஹ் சத்சங்பவன்.** ஜுலை 2012-ல் அஸ்திபாரம் போடப்பட்டது. சிமெண்ட் கான்க்கிரீட்டினாலான ஆலய கட்டுமானப் பணிக்கு விசுவாசிகள் ரூ.1,06,922/-ஐ நன்கொடையாக கொடுத்ததோடு கட்டிட வேலைகளிலும் உதவி செய்தனர். கட்டுமானத்தின் போது முன்னாள் கிராமத் தலைவர் திரு. அனுமன் சிங் தனது தவறுக்கு மன்னிப்புக் கேட்டார். 27.11.2016 அன்று பத்லி தாபர் ஆலயம் தேவ நாம மகிமைக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. இப்பிரதிஷ்டையில் சென்னை சைதாப்பேட்டையிலிருந்து திரு. ஸ்டீபன், திரு. இம்மானுவேல் மற்றும் ஜெபக்குழுவினர் கலந்து கொண்டனர். மிஷனெரி திரு. விஜயகுமார் ஆலய பிரதிஷ்டையின் போது பதேகாபாத் பணித்தள ஊழியராக இருந்தார்.

## ஆலய செயல்பாடுகள்

பத்லி தாபர் ஆலயத்தில் 8 பேர் கொண்ட ஆலய செயற்குழு உள்ளது. ஒவ்வொரு மாதமும் இரண்டாவது ஞாயிறு திருவிருந்து ஆராதனையும், புதன்கிழமை தோறும் உபவாச ஜெபமும் நடத்தப்படுகிறது. சபை மூப்பர் திரு. தேவிலாலும், செயற்குழு உறுப்பினர்களும் இணைந்து வெளிப்புற ஊழியத்தில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் மூலம் குசும்பி மற்றும் கன்வர்புரா கிராமங்களில் இரண்டு ஆராதனைக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. மொத்த விசுவாசிகளின் எண்ணிக்கை 79 ஆகும்.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



திரு. ஜெயச்சந்திரன் அவர்கள் (வயது 73) தூய பேதுரு ஆலயம், ஈரோடு ஜெபக்குழுத் தலைவராக கடந்த 39 ஆண்டுகள் கிரமமாக ஜெபக்குழுக்களை நடத்தியும், காணிக்கை சேகரித்தும் வந்தார்கள். இவர்கள் 16.04.2024 அன்று தேவ ராஜ்யத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். அண்ணன் எஸ்.பி.ஐ.யில் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள். தூய பேதுரு ஆலயத்தில் ஆர்கனிஸ்டாக இருந்து, இசைக்கருவிகளை அநேகருக்கு கற்றுக் கொடுத்தும் வந்தார்கள். அன்னாரை இழந்து வாடும் அவர்களது மனைவி திருமதி. ஹேமா ஜெயச்சந்திரன், மகள்கள் திருமதி. பெல்சியா கிருபா மற்றும் திருமதி. விடியா ஜெபா குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**அருட்திரு. ஜாண் பெனின்,** விரிவுப் பணி செயலர் – ஈரோடு.



கன்னியாகுமரி மாவட்டம், காட்டாத்துறைச் சேர்ந்த திரு. சி. பால் வில்சன் அவர்களின் துணைவியார் திருமதி. பியூலா வில்சன் அவர்கள் 16.08.2024 அன்று கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்கள். இவர் பிறர் மீது கரிசனை நிறைந்தவர். ஊழியங்களையும், ஊழியர்களையும் குறித்து கரிசனையோடு விசாரித்து, ஜெபித்து, அன்போடு ஆதரித்தவர். ஊழியத்தின் தேவைகளுக்காய் கடைகள் மற்றும் குடும்பங்களை சந்தித்து, ஜெபித்து, பணம் சேகரித்த தன் கணவரின் ஊழியத்தை ஊக்கப்படுத்தியவர். இவர்களின் இரு மகன்களின் குடும்பங்களும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களுக்காக ஜெபித்தும், மிஷனெரி மற்றும் குழந்தைகளை ஆதரித்தும் வருகிறார்கள். இவரைப் பிரிந்து வாடும் கணவர் மற்றும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

**அருட்திரு. டி. ஆல்பின்,** விரிவுப்பணி செயலர் – கன்னியாகுமரி



திரு. பி. சாமுவேல் அவர்கள், 2003-ம் ஆண்டிலிருந்து திட்டுவிளை சேகரம், மால்ட்புரம் சி.எஸ்.ஐ. சபையில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஜெபக்குழுத் தலைவராக பொறுப்பு வகித்தார். திருச்சபையில் மிஷனெரி பணிக்கு ஆதரவு திரட்டு வதிலும், ஜெபக்குழுவை நடத்துவதிலும் மிகுந்த ஆர்வத்துடன் செயல்பட்டவர். அவருடைய முயற்சியால் மால்ட்புரம் சி.எஸ்.ஐ. சபை ஒரு மிஷனெரியை தாங்கியும், இரண்டு குடும்பங்கள் மூலம் 2 குழந்தைகளின் படிப்பை தாங்கியும் வருகிறார்கள். அண்ணன் அவர்கள் உடல்நலக் குறைவு ஏற்பட்டு 30.08.2024 அன்று தேவ ராஜ்யத்திற்கு அழைப்பைப் பெற்றார்கள். அவர்கள் விட்டுச் சென்ற மனைவி, பிள்ளைகள், தாயார் மற்றும் குடும்பத்தினரை கர்த்தர் தேற்றும்படி ஜெபிப்போம்.

**திரு. எஸ். ஆசீர்தாஸ்,** கௌரவ விரிவுப்பணி செயலர் – திட்டுவிளை

அக்டோபர்
1
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. யுவனேஷ் T.

## ஜம்மு

### நரோட்: ஜீவர் ஜோஸ்வா & ஷேத்ரிமயூம் பிரியா தேவி

**துதிக்க:** 2 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கையிட்டனர். 4 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு சுமார் 670 பேருக்கு நற்செய்தி பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. ஜிம்வா மற்றும் ஜான்சில் சோக் கிராமங்களில் முதன் முறையாக விடுமுறை வேதாகமப் பள்ளி நடத்தப்பட்டது. நாக்ரி கிராமத்தில் தேடுவோர் முகாம் சிறப்பாக நடத்தப்பட்டது. தலோர் கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நாக்ரி கிராமத்தில் ஆராதனை நடத்த ஏற்ற இடம் கிடைக்க; கிறிஸ்தவ விசுவாசத்திலிருந்து பின்வாங்கும்படி சகோதரி பச்சானியை வற்புறுத்தும் அவரது குடும்பத்தினர் மனந்திரும்ப; புதிய விசுவாசியான சப்னாவின் கர்ப்பப்பை கட்டி மறைந்து சுகம் பெற; இராணுவத்தில் சேர காத்திருக்கும் ஆஷிஷ் மற்றும் சுமன்-க்கு விரைவில் வேலையில் சேர்வதற்கான உத்தரவு வர; சுவாசக் கோளாறினால் கஷ்டப்படும் சசிபால் சுகம்பெற; விசுவாசி சுனிலுக்கு நல்ல வேலை வாய்ப்பை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

### ஆர். எஸ். புரா: லுன்ஜாலால் ஹாக்கிப் & மேரி நெங்னெய்கிம்

**துதிக்க:** அகர்சக் கிராமத்தில் நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் மன்ஜித் சிங், அமர்தீப் சிங் மற்றும் ஜிந்தா சிங் குடும்பத்தினருக்காக; சக்ஹறினியா கிராமத்தில் பிரசவ நேரத்தில் மிக ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்ட மனிஷாவுக்கு ஜெபத்தின் மூலம் சுகப் பிரசவத்தில் குழந்தை பிறக்க தேவன் பாராட்டின கிருபைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குலியன் சமுகத்தைச் சேர்ந்த விசுவாசிகள் தடையின்றி தொடர்ந்து ஆலய ஆராதனையில் பங்கு பெற; அகர்சிக் கிராமத்தில் போதைப் பழக்கத்திற்கு அடிமைபட்டுள்ள அமர்சிங் விடுதலை பெற; கடப்பூர், குலியன், அகர்சக் கிராமங்களில் நடைபெற்று வரும் வேதாகம வகுப்புகள் தடையின்றி தொடர்ந்து நடைபெறவும், விசுவாசிகள் அனைவரும் இவ்வகுப்புகளில் பங்கு பெற்று விசுவாசத்தில் வேரூன்றி வளர; முதுகெலும்பு பிரச்சனையிலிருந்து சுனிதா பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.

## இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

*மத்தியப்பிரதேசத்தைச் சேர்ந்த ரேக்காபேன் சூரத்திலுள்ள ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இவர் ஒரு ஆத்தும பாரம் கொண்ட விசுவாசி. வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் மற்றவர்களுக்கு உதவி செய்தும், கிறிஸ்துவை பற்றி அறிவித்தும் வந்தார். ஒருநாள் சுயநினைவின்றி மயங்கி கிடந்த வாலிபனுக்கு முதலுதவி செய்து பிழைக்க வைத்தார். அவருடைய மூத்த மகன் வாகனத்தில் அதிக மதிப்புள்ள பொருட்களை ஏற்றிச் சென்றபோது வாகனம் விபத்துக்குள்ளான நிலையில் அவருக்கும், பொருட்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படாதபடி தேவன் பாதுகாத்தார். அநேகருக்கு உதவி செய்து வருவதால் தேவன் அவரது குடும்பத்தை பாதுகாத்து வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.*

## அக்டோபர் 2 புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வீரேந்திர குமார்
திருமதி. சுனிதா வீரேந்திர குமார்
திரு. டேவிட்சன் ராஜாசிங்
திரு. தேசாய் திலீப்பாய்

### நெளஷேரா:

**ஷேக் சுபானி & எமி பாக்கியா**

**துதிக்க:** காவான் மற்றும் பல்லி கிராமங்களில் நற்செய்தி ஊழியத்தின் மூலம் நான்கு குடும்பங்கள் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். சியால் கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி அசோக் இரு சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தபோது பாறை ஒன்று அவர் மேல் விழுந்து கையில் எலும்பு முறிவு ஏற்பட்ட போதிலும் அற்புதமாய் அவரது ஜீவனை தேவன் பாதுகாத்தார். விசுவாசி நீலம் அவர்களின் இரண்டு வயது மகன் மேல் மாடியிலிருந்து கீழே விழுந்து தலையில் அடிப்பட்டநிலையில் எண்ணெய் பூசி ஜெபித்த போது தேவன் சுகமருளினார். சத்தீஸ்கர் மாநிலத்திலிருந்து வேலை நிமித்தம் புலம் பெயர்ந்து வந்த விசுவாசிகள் கிறிஸ்துவின் நற்செய்தியை பிறருக்கு அறிவித்து வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டோங்ரி கிராமத்தின் புதிய தொடர்பாளர்களான ஆகாஷ் மற்றும் சுமன் குடும்பங்கள் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதிக்கப்பட; டோங்ரி கிராமத்தின் 8 வயது சிபி என்ற சிறுமி சிறுநீரக குழாய் பிரச்சனையிலிருந்து குணமடைய; ரஜோரி கிராமத்தில் காது கேளாத, வாய் பேசமுடியாத குங்கி என்ற சகோதரி காணாமல் போயுள்ளார். அவர் பத்திரமாய் வீடுவந்து சேர; காய் கிராம ஆலயத்தின் பெயர் அரசாங்க பதிவேடுகளின்படி திருத்தம் செய்யப்பட; சமுதாய கட்டுப்பாடுகளினால் ஆலயம் வர தயங்கும் விசுவாசிகள் கிறிஸ்துவில் பெலப்பட ஜெபிப்போம்.

### பஜல்டா: வசாவே எலேஷ் பிரபு & சுனிதா வெச்யா,

**துதிக்க:** செல்லா, தீயால், டியோட், ராம்கொட்டே, மண்வால் ஆகிய கிராமங்களில் சிறுவர் கூட்டங்கள் நடத்தவும், 96 பிள்ளைகள் கலந்து கொண்டு தேவனை அறிந்து கொள்ளவும் தேவன் உதவி செய்தார். ஜெபத்தினால் 7 குடும்பங்கள் புதிய தொடர்பாளர்களாக கிடைத்துள்ளனர். தீயால் கிராமத்தில் மஹாசா இனத்தைச் சேர்ந்த பல்வந்த் சிங் குடும்பத்தினர் தேவன் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாயுள்ளதற்காய் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கேட்ட மக்கள் தேவனை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள; விபத்தினால் காலில் காயம் ஏற்பட்டு நடக்க சிரமப்படும் ஊழியரின் மனைவி சுனிதாவுக்கு தேவன் சுகமருள; மருத்துவ வசதியின்றி தவிக்கும் பஜல்டா பகுதி மக்களுக்கு விரைவில் மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட; மஹாசா இன மக்கள் மத்தியில் காணப்படும் ஜாதிப் பிரச்சனைகள், கிறிஸ்துவர்களை தாழ்வாக மதிப்பிடுவது, புறகணிப்பது, விசுவாசிகளுக்கு உபத்திரவங்கள் கொடுப்பது போன்ற தடைகள் நீங்க ஜெபிப்போம்.

## அக்டோபர் 3 வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. ராபின்சன் ஹஸ்தக்

# ஹிமாச்சலப் பிரதேசம்

### ஆனி: ஜின் சாவ்ம் & சிங் ஹோய்கிம்

**துதிக்க:** ஒருவர் கிறிஸ்துவில் புதுவாழ்வு பெற்றுள்ளார். இரண்டு கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதோடு 60 சுவிசேஷப் பிரதிகள், 20 புதிய ஏற்பாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ராஜ், சமாட்ராம் ஆகியோர் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். அநேக வருடங்களாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டிருந்த ரீனா விசுவாசிகளின் ஜெபத்தினால் விடுதலை பெற்றுள்ளார். சபை மூப்பர் பயிற்சி சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக ஆலயத்திற்கு வரும் சித்ரா, வர்ஷா, சித்தா தேவி ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற; புதிய விசுவாசி சமார்ராமின் மகன் ஹேமந்த் மனநோயிலிருந்து பூரண சுகம்பெற; திருமணத்திற்காக காத்திருக்கும் ரஜனி மற்றும் சந்திராவுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைகிடைக்க; இருதய வீக்கத்தினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள சரோ தேவி பூரண சுகம் பெற்று வீடு திரும்ப ஜெபிப்போம்.

### ராம்பூர்: தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ் லாம்வுங்

**துதிக்க:** ஒருநபர் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அறிக்கையிட்டுள்ளார். புதிதாக 7 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு சுமார் 655 பேருக்கு சுவிசேஷப் பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. ஜோதியின் மகளும், சுமிதாவின் மகனும் அசுத்தாவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். இரு சக்கர வாகன விபத்திலிருந்து தீபக் அற்புதமாய் பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கௌஷா கிராம விசுவாசிகளின் மத்தியில் தேவன் ஒருமனப்பாட்டின் ஆவியைத் தர; ஹிரா தேவியின் மகள் மற்றும் மகன் இடையே உருவாகியுள்ள பிரச்சனைகள் நீங்க; அவரி பகுதியில் நடைபெறும் ஊழியங்களில் மிகுதியான வளர்ச்சியை தேவன் கட்டளையிட; குடிப்பழக்கத்தினால் குடும்பத்தில் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் தீபக் அதிலிருந்து விடுதலை பெற்று குடும்பத்தாருடன் சமாதானத்துடன் சேர்ந்து வாழ; திட்டமிடப்பட்டுள்ள சபை வளர்ச்சிக்கான நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

### தானேதார்: ஜெபர்சன் &காயத்ரி

**துதிக்க:** 4 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு திருச்சபையில் இணைந்தனர். 13 கிராமங்களில் ஜெபநடை பாதை மேற்கொள்ளப்பட்டு சுமார் 60 பேருக்கு தனித்தனியாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சுதேச ஊழியர் ஹரேந்திர சிங் குடும்பம் குழந்தை செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. அநேக இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டபோதிலும் ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளின் வீடுகளை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜெப நடைபாதை மேற்கொள்ளப்பட்ட அகார், தெர்சாரா, மொக்டா மற்றும் பிஜ்தார் கிராமங்களில் மக்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்ட; பல்வாடி கிராமத்தில் செய்வினைக் கட்டுகளிலிருந்து சரஸ்வதி விடுதலை பெற; சில்லாரு கிராமத்தில் சகுந்தலா தேவி வீட்டில் ஆராதனை ஆரம்பிக்கப்பட; மஞ்சுவுக்கு கர்ப்பப்பையிலுள்ள கட்டி நீங்கி கர்ப்பம் தரிக்க தேவன் கிருபை செய்ய ஜெபிப்போம்.

## அக்டோபர் 4 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. தனேதி உத்தமஸ்ரீ இஸ்ரேல்

### நேர்வா: எஸ். இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா

**துதிக்க:** மூன்று புதிய கிராமங்களில் முதன்முறையாக நற்செய்தி அறிவிக்கவும், 7 இடங்களில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் விசுவாசிகள் அநேகர் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்கவும் தேவன் உதவி செய்தார். நான்கு கிராமங்களில் பின் தொடர் பணியின் மூலம் மக்களின் இல்லங் களுக்குச் சென்று ஜெபித்து வர தேவன் கிருபை செய்தார். நமது மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்கு தேவன் தந்த பிரயாணப் பாதுகாப்பு மற்றும் சரீர சுகத்திற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** டுங்லேஸ் கிராமத்தில் விசுவாசிகளை மீண்டும் தாய்மதம் திரும்பும்படி கட்டாயப்படுத்தி வரும் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்கள் தேவனால் தொடப்பட; சோப்பால், ஜிக்னியில்ரு குப்வி கிராமங்களில் நடத்தவிருக்கும் நற்செய்தி பெருவிழா நல்ல பலனைத் தர; தவறான உபதேசங்களினால் விசுவாசிகளை குழப்பிவரும் போதகர்கள் மனந்திரும்பி வேதத்தின்படி போதிக்கப்பட; மிஷனெரி குடும்பத்தை குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## பஞ்சாப்

### மான்சா: தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

**துதிக்க:** 8 பேர் கிறிஸ்துவில் புது வாழ்வு பெற்று திருச்சபையில் இணைந்துள்ளனர். 2 புதிய கிராமங்களில் சத்சங் கூட்டங்களும், 4 இடங்களில் இயேசு திரைப்படமும், 2 இடங்களில் பெண்கள் கூடுகையும் நடத்த தேவன் கிருபை செய்தார். ஜெபத்தின் மூலம் குலாப் சிங்கிற்கு அரசாங்கத்தில் வேலை கிடைக்க தேவன் உதவி செய்தார். அரசாங்க கல்வி நிறுவனத்தில் மேற்படிப்பு படிக்க ஹர்சித் கௌருக்கு இடம் கிடைத்துள்ளது. தடைப்பட்டிருந்த போகா சபை ஆராதனை மீண்டும் துவங்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மன்டெர்மா, கொகியர், மம்கட்கி ஆகிய புதிய கிராமங்களில் நடத்தப் படவிருக்கும் சத்சங் கூடுகைகள் தடையின்றி நடைபெற; தன் மனைவி ஆலயம் செல்வதை தடை செய்யும் குர்ஜித் சிங் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு குடும்பமாய் ஆராதனையில் பங்கு பெற; வேலையின்றி குடும்பத்தை நடத்த சிரமப்படும் சம்சி சிங்கிற்கு நிரந்தரமான வேலை கிடைக்க, குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்பட; இரத்த புற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள பரமேஸ்வரி கௌருக்கு தேவன் அற்புத சுகமருள ஜெபிப்போம்.

## *நம் காலங்கள் அவர் கரத்தில்*

*குஜராத் மாநிலம், சொரம்பா பணித்தளத்தி லுள்ள கஸ்வாவ் கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி ரத்திலால் ஒருநாள் காலைப்பொழுதில் தனது வயலில் விளைந்திருந்த பயிர்களை பார்வையிடச் சென்றார். அப்போது அங்கு அறுந்து விழுந்த மின்கம்பியை அப்புறப்படுத்த முற்பட்டபோது அதிலிருந்த மின்சாரம் தாக்கி அவர் தூக்கி வீசப்பட்டார். கைகள் எரிந்த நிலையில் அல்லேலூயா என்று சத்தமிட்டபடியே கீழே விழுந்தவரை அருகிலிருந்தவர்கள் ஓடிவந்து மருத்துவ மனைக்கு தூக்கிச் சென்றனர். அதிக அளவில் மின்சாரம் சரீரத்தில் பாய்ந்த போதிலும் உயிருக்கு சேதம் ஏற்படாவண்ணம் கர்த்தர் பாதுகாத்தார். தேவனுக்கே மகிமை!*

## அக்டோபர் 5 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ராக்கி மார்தி

# ஹரியானா

### கலான்வாலி:

### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** சிறுவர்களுக்கான வேதாகம வகுப்புகள் மற்றும் சிறப்பு முகாம்கள் நடத்த தேவன் உதவி செய்தார். சவாந்த் காரா கிராமத்தில் பிசாசின் பிடியினால் கட்டப்பட்டு குடும்பத்திலும் மற்றும் கிராமத்திலும் இடையூறு விளைவித்து வந்த ஹமீந்தர் சிங் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். சில சபைகளில் புதிதாக பெண்கள் ஜெபக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேவு கிராமத்தை சார்ந்த ஜஸ்வீர் சிங் மற்றும் 13 வயதேயான சிறுவன் ஹர்மான் போதைப் பழக்கத்திலிருந்து விடுதலைபெற; ஜக்மாலி கிராமத்தில் விசுவாசிகளின் கூடுகை குறித்த நேரத்தில் நடத்த தேவன் உதவி செய்ய; புதிய தொடர்பாளரான ஹர்மீந்தர் சிங் மன அழுத்தத்திலிருந்து சுகம்பெற; ஓடன் என்ற புதிய பணித்தளத்தில் ஆராதனையில் பங்கு பெறும் 6 குடும்பங்கள் விசுவாசத்தில் வேரூன்றி வளர ஜெபிப்போம்.

### தோஷம்: அஜய் பர்டே

**துதிக்க:** ஒருவர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக அறிக்கையிட்டு சபையில் இணைந்தள்ளார். ஆண்கள் மற்றும் பெண்கள் ஐக்கிய கூடுகைகள் சிறப்பாய் நடைபெற தேவன் கிருபை செய்தார். சபை மூப்பர் பாவன் பாய், வயலுக்கு பூச்சி மருந்து தெளிக்கும்போது மருந்து கண்ணில் பட்டு கண் தெரியாமல் போன நிலையில் ஜெபித்து தண்ணீர் ஊற்று கழுவி மீண்டும் கண்பார்வை பெற்றுக் கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாலவாஸ் கிராமத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராதனைக்கு காணப்படும் தடைகள் நீங்கி தொடர்ந்து ஆராதனை நடைபெற; சமூக தடைகளினால் கிறிஸ்துவை அறிக்கையிட தயங்கும் மக்களின் இருதயங்களை தைரியத்தின் ஆவியினால் தேவன் நிரப்ப; தாட்மா கிராமத்தில் அடிக்கடி வலிப்பு நோயினால் கஷ்டப்படும் பிரவீனுக்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

# ராஜஸ்தான்

### காஜுவாலா: வி. குமார் & பெட்ரிசியா தமிழ்ச்செல்வி

**துதிக்க:** ‘வீடுகள் தோறும் நற்செய்தி’ நிகழ்ச்சியின் மூலம் 5பிபி கிராமத்திலுள்ள ஜஸ்பீர்சிங் வீட்டில் நடத்தப்பட்ட ஜெபக் கூடுகையில் புதிதாக அநேகர் கலந்து கொண்டு சுவிசேஷத்தைக் கேட்டனர். எல்லைப் பாதுகாப்புப் படையினரின் எச்சரிக்கையினால் நிறுத்தப்பட்டிருந்த சத்சங் கூடுகை 23பிடி கிராமத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. புதிதாக விசுவாசத் திற்குள் வந்துள்ளோருக்கு நடத்தப்பட்ட கூடுகையில் 4 குடும்பங்கள் கலந்து கொண்டு விசுவாசத்தில் உறுதிப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிக மழையினால் பயிர்கள் சேதமடைந்துள்ளதால் நமது விசுவாசிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாதிருக்க; தமிழ் நாட்டில் செய்யப்படுகின்ற ஊழியங்களைப் பார்வையிட்டுச் சென்ற குருப்ரீத்சிங் குழுவினர் அவற்றை விசுவாசிகளிடம் எடுத்துரைத்து அவர்களை ஆவிக்குரிய ஜீவியத்தில் பெலப்படுத்த; புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் வேரூன்றி வளர ஜெபிப்போம்.

## அக்டோபர் 6 ஞாயிறு

### ஹனுமான்கட்: முதவத்து ராஜு நாயக் & புக்கியா ஜான்சிபாய்

**துதிக்க:** 4 பேர் இயேசுவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு திருச்சபையில் இணைந்தனர். திருமணமான ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு தொடர் ஜெபத்தினால் விசுவாசி மனுசிங் குடும்பத்திற்கு குழந்தை செல்வத்தினால் தேவன் ஆசீர்வதித்துள்ளார். அசுத்தாவியின் பிடியினால் கஷ்டப்பட்டு வந்த சுனிதா கௌர் விசுவாசிகளின் ஜெபத்தினால் விடுதலை பெற்றார். வேலை நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றிருந்த விசுவாசி ரமேஷ் நீண்ட வருடங்களுக்குப் பிறகு சுகமாக வீடுதிரும்ப கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நுரையீரல் தொற்றினால் சுவாசிக்க சிரமப்படும் நிர்மல் பூரண சுகம்பெற; கடன் பிரச்சனையினால் கஷ்டப்படும் கத்தார்சிங்க்கு ஏற்ற வேலை வாய்ப்பை தேவன் கட்டளையிட; சன்னி மற்றும் சின்னிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் அமைத்துத் தர; விசுவாசி அஜய்க்கு நல்ல வேலை கிடைக்க; புஸ் கௌருக்கு தேவன் சுகப்பிரசவத்தைக் கட்டளையிட ஜெபிப்போம்.

### சாம்ரானியா: மீனுகா அடப்பா மேத்யூ & ராம்புரம் பெடாக்கா ஆஷா

**துதிக்க:** பிரோலி கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. லுஹாரி சபையில் 3 நாட்கள் நடத்தப்பட்ட உபவாச ஜெபத்தில் 30 பேர் கலந்து கொண்டு சொந்த மக்களின் இரட்சிப்பிற்காக ஊக்கமாய் ஜெபித்தனர். சபை விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டமும், சபை மூப்பர்களுக்கு ஆத்தும ஆதாயப் பயிற்சி முகாமும் ஆசீர்வாதமாய் நடைபெற தேவன் கிருபை செய்தார். இவ்வாண்டு ஏற்ற பருவ மழையைக் கட்டளையிட்ட தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மானா, எமிலிபூரா கிராமத்தில் விசுவாசத்தைவிட்டு பின்வாங்கி போயுள்ள மக்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; கோபால்பூரா கிராமத்தைச் சேர்ந்த குவார்சிங் புற்றுநோயிலிருந்து பூரண சுகம் பெறவும், இதன் மூலம் இக்கிராமத்தில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிடவும்; பல்ராம் மற்றும் கைலாஸ் ஆகிய சுதேச ஊழியர்களின் பாதுகாப்பிற்காக; சிக்காரி கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் சபை மூப்பர் ராம்சிங் மனநோயிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

### ஆபத்துக் காலத்தில் அடைக்கலமானவர்

*மஹாராஷ்டிரா மாநிலம், போரடி பணித்தளத்திலுள்ள சாக்ரிபாடா கிராமத்தைச் சேர்ந்த விசுவாசிகளான பாயல்பேனின் குடும்பம் விவசாய வேலைக்காக நாசிக் பகுதிக்கு புலம் பெயர்ந்தனர். எட்டு மாத கர்ப்பிணியான பாயல்பேன், தனது குடும்பத்தினருடன் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது பிரசவ வலி ஏற்பட்டு அருகிலிருந்த மருத்துவ மனைக்கு கொண்டுச் செல்லப்பட்டார். அவளை பரிசோதித்த மருத்துவர்கள் வயிற்றிலுள்ள குழந்தை மூன்று நாட்களுக்கு முன்பே இறந்துவிட்டது, உடனே அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்று அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார். அறுவை சிகிச்சையின் போது அதிக இரத்தம் வெளியேறியதால் உயிர் பிழைப்பது கடினம் என்று மருத்துவர்கள் கூறிவிட, குடும்பமாக உபவாச ஜெபத்தில் தரித்திருந்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் பாயல்பேனுக்கு அற்புத சுகமருளி உயிரை காத்தார். அல்லேலூயா.*

## அக்டோபர் 7 திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. விஜய் பிரசன்னா ஐசக்
திருமதி. சரோஜினி நர்சாரி

# உத்தராகண்ட்

### பாஸ்டூர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

**துதிக்க:** ராம்புரா சக்கேர், மஹாஸ்புரா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜகதீப் கௌர் மலேரியாவிலிருந்து சுகம்பெற்றார். அசுத்தாவியின் பிடியிலிருந்து அன்சிகாவுக்கு தேவன் விடுதலை அருளினார். சோகினி & மோனிகா பாம்புக் கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டனர். கட்டிட வேலையில் ஈடுபட்டிருந்த ஆதித்யா தவறுதலாக முதல் மாடியிலிருந்து கீழே விழுந்த போதிலும் காயமின்றி தேவன் பாதுகாத்தார். இடுப்பில் உள்ள கட்டியினால் உட்காரவும், நடக்கவும் இயலாமல் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்ற வந்த சோனாவதி விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து, பிறருக்கு முன்மாதிரியாய் வாழ; நடத்தப்படவிருக்கும் சபை மூப்பர் கூட்டம், போதை விழிப்புணர்வு முகாம், முதியோர் கல்வி, வெளிப்புற சந்திப்பு ஊழியம் ஆகியவை எவ்வித தடையுமின்றி நடைபெற; குர்மீத்சிங் குடல் பிரச்சனையிலிருந்தும், ஷோகினி காச நோயிலிருந்தும், அன்சிகா இருதயப் பிரச்சனையிலிருந்தும், பிரசாங்சிங் சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்தும் சுகம்பெற ஜெபிப்போம்.

### கிச்சா:
### பிபாபா பானி & பித்திகா

**துதிக்க:** 3 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். ஜெபக் கூட்டம் நடத்த குருநாம்சிங் தனது வீட்டை திறந்து தந்துள்ளார். ராம் பிரிகாஷ் & தீபக் குடும்பங்கள் விசுவாசத்தில் வளர்ந்து வருகின்றனர். ராய்சீக் சமுகத்தைச் சேர்ந்த பால்தேவ் மற்றும் அவரது குடும்பத்தினர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிச்சா பணித்தளத்திலுள்ள 95 கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்பட; ராய்சீக், குமோனி மற்றும் பஹாடி மக்கள் சுவிசேஷத்திற்கு செவிசாய்க்க; கிறிஸ்தவர்களுக்கு குருத்துவாரா மூலம் வரும் எதிர்ப்புகள் நீங்க; போடோலி, சஜானா, நியூமங்கள், லால்பூர், கசான்புரா, போடோரி, பிரதாப்பூர், சிமோலின், டோரேடாம், சாந்திபுரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

## தேவனால் எல்லாம் கூடும்

*ஜார்கண்ட் மாநிலம், பகையா பணித்தளத்திலுள்ள சௌரி திருச்சபையைச் சேர்ந்த நமது விசுவாசி ஈஸ்வர் கடந்த 9 மாதங்களுக்கு முன்பு ஆடுகளுக்கு இலை பறிக்க மரத்தில் ஏறியபோது தவறி கீழே விழுந்து கால் எலும்பில் முறிவு ஏற்பட்டது. இனி இவர் எழுந்து நடப்பது சாத்தியமில்லை என்று மருத்துவர் கூறிவிட்ட நிலையில் நமது விசுவாசிகள் அவரது வீட்டிற்குச் சென்று அவருக்காக ஜெபித்தனர். தேவன் அவருக்கு பரிபூரண சுகத்தை கட்டளையிட்டார். அவர் ஆலயத்திற்கு வந்து ஒரு ஆட்டுக் குட்டியை காணிக்கையாகப் படைத்து தேவனுக்கு நன்றி செலுத்தினார். அல்லேலூயா!*

## அக்டோபர் 8 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. அர்விந்த் குஜுர்

### நானக்மட்டா: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** 2 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கையிட்டுள்ளனர். பிறப்பு உறுப்பிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்த சிறுவன் அயூஸ் ஜெபத்தினால் பரிபூரண சுகம் பெற்றான். பிசாசின் பிடியிலிருந்து சல்ஜீத் கௌர் இயேசுவின் நாமத்தினால் விடுதலை பெற்றுள்ளார். அடிக்கடி இரத்த வாந்தி எடுத்து கொண்டிருந்த திரிலோக் சிங் ஜெபத்தின் மூலம் பரிபூரண சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஹரியா, அம்ரிகடா மற்றும் இஸ்லாம் கிராமங்களில் நடைபெறும் கிறிஸ்தவக் கூட்டங்களுக்கு யாரும் போகக்கூடாது என்று குருத்துவாரா மூலம் போடப்பட்டுள்ள தடைகள் நீங்க; பிங்கி, திரிலோக் சிங் மற்றும் ஷிவானி குடும்பங்கள் தடையின்றி இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள; பல்ஜித் மற்றும் ரோகினிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையை தேவன் அமைத்து தர ஜெபிப்போம்.

## உத்தரப் பிரதேசம்

### பஸ்தி: ஸ்ரீனிவாசன் & ஷீபா ஜி

**துதிக்க:** புதியதோர் கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 250 பேர் முதன்முறையாக நற்செய்தி கேட்டனர். படேபான் ஆலயத்தில் வாலிபர் பயிற்சி கூடுகை ஆசீர்வாதமாய் நடைபெற தேவன் உதவி செய்தார். ஜெபத்துடன் சுதந்திர தினத்தைக் கொண்டாட தேவன் கிருபை செய்தார். எதிர்ப்பின் மத்தியிலும் ஊழியர்களுக்கு தேவன் தந்து வரும் பிரயாண பாதுகாப்பிற்காக, ஆரோக்கியத்திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரவி ரத்தன் என்ற குழந்தை வலிப்பு நோயிலிருந்து சுகம் பெற; பிரியா சௌத்ரி என்ற வாலிபப் பெண் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற; நமது விசுவாசிகளுக்கு ஏற்ற வேலை வாய்ப்புகளை தேவன் கட்டளையிடவும், அவர்களின் வாழ்வாதார தேவைகள் சந்திக்கப்படவும்; நடைபெறவுள்ள அவிக்குரியக் கூட்டங்கள் மற்றும் பெண்கள் கூடுகை தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

### காட்டாம்பூர்: ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** விசுவாசிகளுக்கு ஆத்தும ஆதாயப் பயிற்சி சிறப்பாக நடைபெற்றுள்ளது. குடும்பத்தினர் ஆலயம் செல்வதை தடுத்து வந்த பல்ராம் தற்போது ஆலய ஆராதனையில் பங்கு பெற்று வருகிறார். விசுவாசி ராமதேவி சமைத்து கொண்டிருந்த போது ஏற்பட்ட கேஸ் சிலிண்டர் வெடிப்பிலிருந்து அற்புதமாய் பாதுகாக்கப்பட்டார். ஜெகதீஷ் மற்றும் கோபாலை வாகன விபத்திலிருந்து தேவன் பாதுகாத்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டும் சஞ்சய், மனீஷ், குஷிராம், ராஜ், பிரதீப், ரிஷி ஆகியோர் விசுவாசத்தில் பெலப்பட; கடுமையான எதிர்ப்பு காணப்படும் காட்டாம்பூர் பணித்தளத்தில் தங்கியுள்ள ஊழியர்களை தேவன் பாதுகாக்க; புதிய விசுவாசி தேத்தன் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**அக்டோபர் 9 புதன்**

*உபவாச ஜெபநாள்*

# மத்தியப் பிரதேசம்

## ஆர். எஸ். புரா:

### லுன்ஜாலால் ஹாக்கிப் & மேரி நெங்னெய்கிம்

**துதிக்க:** 11 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு திருச்சபையில் இணைந்தனர். ஊழியத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்த கிராமங்களான போப்பூரா, ராம்பூரா, பஸ்கண்ட் மற்றும் டோம்டுகுவாவில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். சிலோடியா கிராமத்தில் மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் சுமார் 200 பேர் கலந்து கொண்டு தேசத்தின் இரட்சிப்பிற்காக பாரத்தோடு ஜெபித்தனர். துலியா கிராமத்தில் உடல் முழுவதும் கட்டிகளினால் சீழ்பிடித்து கஷ்டப்பட்டு வந்த சாயா தொடர்ந்து ஆலயத்திற்கு வந்து ஜெபித்த போது தேவன் அற்புத சுகத்தை கட்டளையிட்டதற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** சிப்பிபுரா கிராமத்தைச் சேர்ந்த பஹதூருக்கு வயிற்றிலுள்ள கட்டி கறைந்து சுகம்பெற; ராய்கார் கிராமத்தைச் சேர்ந்த ராதேசியாம் கல்லீரல் பிரச்சனையிலிருந்து குணமடைய; தொண்டையிலுள்ள கட்டியினால் கஷ்டப்பட்டு வரும் மன்டல் சுகம்பெற; நாடி மற்றும் லக்ஷ்மி பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற; துலியா கிராமத்தில் ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தினேஷ் மனந்திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## நேப்பா நகர்:

### கோபி கிருஷ்ணன் & மேனகா

**துதிக்க:** 9 பேர் கிறிஸ்துவுக்குள் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். இரவில் தூங்கிக் கொண்டிருந்த விசுவாசி ஜென்டால் துவே மீது விஷ பாம்பு விழுந்த போதிலும் அது தீண்டாதபடி தேவன் பாதுகாத்தார். கடந்த மூன்று மாதங்களாக பிசாசின் பிடியினால் சங்கிலியால் கட்டப்பட்டிருந்த ஜியாலியை தேவன் விடுவித்தார். சிக்கல்யா கிராமத்தில் மூன்று நாட்கள் நடத்தப்பட்ட உபவாச ஜெபத்தில் சுமார் 102 பேர் பங்கு பெற்று தங்கள் சொந்த கிராம மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபித்தனர். குடாடி கிராமத்தில் புதிய ஜெபக்குழு ஆரம்பிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இனம்புரியாத நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சிரயமால் கிராமத்தைச் சேர்ந்த காலுராம் பரிபூரண சுகம் பெற; ஊழியத்திற்கு தீவிர எதிர்ப்புத் தெரிவிக்கும் நந்துராம், தர்சிங், சுர்லா, துல்சிங், ரமா, நர்சிங், ஜனா திவ்யா, தவா, நாகல், லூவ்ரி, சிதி, சில்லாரா ஆகியோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; பிசாசின் ஆதிக்கத்திலிருந்து ரீனா, சுரிதா ஆகியோர் விடுதலை பெற; காக்னா மற்றும் கோட்டி பகுதிகளில் செய்யப்படவிருக்கும் சுவிசேஷ ஊழியத்தை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## அக்டோபர் 10 வியாழன்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சித்ரா பொன்னுசாமி

திரு. ஹரிபாபு குந்த்ரா, திரு. சாந்து மராண்டி

### சிரியா: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** 15 பேர் கிறிஸ்துவே மெய்யான தெய்வமென்று விசுவாசித்து அறிக்கை யிட்டனர். தேவாலியா, பில்காட், சோமால் காட், ஜடியா மற்றும் தாராவாடி கிராம சபைகளில் நடத்தப்பட்ட ஒருநாள் உபவாச ஜெபத்தில் அநேக விசுவாசிகள் பங்குப்பெற்று ஆவிக்குரிய எழுப்புதலுக்காக ஜெபித்தனர். இரண்டு நாட்கள் நடத்தப்பட்ட வாலிபர் முகாமில் சுமார் 80 பேர் கலந்து கொண்டு கிறிஸ்துவுக்காக வாழ தங்களை அர்ப்பணித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களது மூன்று வயது குழந்தையை இழக்கக் கொடுத்துள்ள அனார்சிங் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; கல்லீரல் வீங்கி துன்பப்படுகிற ரோஷனி மற்றும் பார்கிபேன் சுகம் பெற; முன்னா & காயத்ரி தம்பதியினர் மனக்கசப்பு நீங்கி சமாதானமாய் வாழ; மனநலம் பாதிக்கப்பட்டுள்ள 5 வயது சிறுமி ரேணு அற்புத சுகம் பெற ஜெபிப்போம்.

### தார்: சாந்து மராண்டி & ராக்கி

**துதிக்க:** பெக்கிலியா என்ற புதிய கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. டப்பாபாணி கிராமத்தில் விசுவாசிகளின் கூடுகை நல்லமுறையில் நடைபெற்றது. பாவன்தலாய் மற்றும் குன்ஹெரா கிராமங்களில் இரவுக் கூட்டங்களின் மூலம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆத்தும ஆதாயப் பயிற்சி, மூப்பர்களின் பயிற்சி, ஜெபக்குழுத் தலைவர்கள் பயிற்சி ஆகியவை சிறப்பாக நடைபெற கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தன் மனைவியை இழக்கக் கொடுத்துள்ள கமல் பாய் என்ற புதிய விசுவாசிக்கு தேவன் ஆறுதலையும் சமாதானத்தையும் கட்டளையிட்டு அவர் விசுவாசத்தில் நிலைத்திருக்க; உமர்பன் மற்றும் மானாவார் பகுதிகளில் சுவிசேஷத் திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; மார்பக கட்டியினால் கஷ்டப்படுகிற மங்களா (18 வயது), ரோஷினி (23 வயது) மற்றும் மார்பக புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள சூர்மி (26 வயது) ஆகியோரை தேவன் குணப்படுத்த; பனாக்கா கிராமத்தில் விரைவில் ஆராதனை நடத்தப்படவும், டப்பாபாணி, நாயாபுரா மற்றும் செம்மல்டா கிராமங்களில் பெண்கள் முகாம் சிறப்பாக நடைபெறவும் ஜெபிப்போம்.

## செல்லுமிடமெங்கும் சுவிசேஷம்

*மத்தியப்பிரதேசம் மாநிலம் டப்ரா பணித் தளத்தின் மாலன்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ராகேஷ். 45 வயதான இவர் ஊரிலே சாட்சியாக வாழ்ந்து வருவதுடன் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி பிறருக்குச் சொல்லிக்கொண்டே இருப்பார். கிறிஸ்துமஸ் பெருவிழாவில் கலந்துகொள்ள பக்கத்து கிராமத்திற்கு சென்றவர், விழா முடிந்து தன்னுடைய கிராமத்திற்கு திரும்ப ஆட்டோ ரிக்ஷாவில் மற்ற பயணிகளோடு பயணித்துள்ளார். கூட பயணித்த அனைவருக்கும் கிறிஸ்துவைப் பற்றி கூற ஆரம்பித்தார். எரிச்சலடைந்த மதத்தீவிரவாதி ஒருவன் புகார் அளித்ததினால் அவர் காவல்நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு அவருடைய தொடர்புகள், பணவரவுகள் பற்றி விசாரிக்கப்பட்டார். ஆனால் தேவன் அருளிய ஞானத்தில் அனைவருக்கும் சரியான பதில் சொன்னது மட்டுமன்றி காவலர்கள் அனைவருக்கும் நற்செய்தி கூறியுள்ளார். விசாரனையின் முடிவில் குற்றமற்றவர் என்று மரியாதையுடன் விடுவிக்கப்பட்டார். தேவ நாமம் மகிமை யடைந்தது.*

## அக்டோபர் 11 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மேரி புஷ்பம் டேனியல்
திரு. கஜன் சம்பிரமரி

### குணா: சத்தீஷ் & ஷர்மிளா

**துதிக்க:** மோஹன்பூர் கிராமத்தில் விஷ பாம்பின் கடியினால் பாதிக்கப்பட்ட குன்ச்சாவுக்காக தொலைபேசி மூலம் ஜெபித்த போது தேவன் பாதுகாத்தார். உதய்பூர் கிராமத்தில் மின்சாரம் தாக்கப்பட்டு ஒருமணி நேரம் சுயநினைவின்றி இருந்த சரிதா என்ற சிறு பிள்ளையை விசுவாசிகளின் ஒருமித்த ஜெபத்தினால் தேவன் காப்பாற்றினார். ரஞ்சா கிராமத்தில் மூன்று பேர் தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். மலேரியா காய்ச்சலினால் 21 நாள் சுவீனமாயிருந்த சபை மூப்பர் ராம்சந்த் பரேலாவை ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். நடைபெற்ற வாலிபர் முகாமில் 25 வாலிபர்கள் கலந்து கொண்டனர். சுவிசேஷ ஊழியத்தில் இணைந்துள்ள கேம்சிங் என்ற தன்னார்வ ஊழியருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கால் எலும்பு புற்றுநோயினால் அவதியுறும் கமலேஷின் மகளை தேவன் குணப்படுத்த; பிசாசின் பிடியில் சிக்கியுள்ள குட்டிபாய் விடுதலை பெற; நாய்கடிக்கு சிகிச்சைப் பெறும் சோனிபாயை தேவன் குணப்படுத்த; மோஹன்பூரில் பயிற்சி மையம் அமைக்கப்பட; பிப்பள்கேடி கிராமத்தில் சிறு ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

### டப்ரா:

**சத்திகந்த் பரிச்சா & சகரிகா பிரதான்**

**துதிக்க:** ஜீப் குழு மூலம் 8 புதிய கிராமங்களை சந்திக்கவும், சுமார் 700 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கவும் தேவன் கிருபை செய்தார். இரவு கூட்டத்தில் பங்குபெற்ற சுரேந்திரா அசுத்தாவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். அலெக்ஸ் சுவிசேஷ ஊழியத்திற்கு வாஞ்சை காட்டுகிறார். ஜீப் குழுவில் புதியதாக மீண்டும் இணைந்துள்ள ஆகாஷ் புரிஹாருக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்தில் உதவி செய்ய விரும்பும் ராகேஷ் பட்னாகரை தேவன் பயன்படுத்த; தன் தாயை இழந்துள்ள தன்னார்வ ஊழியர் விஷால் பத்தாமுக்கு தேவன் ஆறுதலளிக்க; விஜய்சிங் குடும்பத்திற்கு தேவன் குழந்தை பாக்கியம் அருள; செகரியா என்ற பழங்குடி மக்கள் மத்தியில் மீண்டும் ஊழியம் துவங்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; பிரேம்நகர் ஆலயக் கட்டுமானப் பணியிலுள்ள பிரச்சனைகள் நீங்கவும், இடையூறு செய்வோர் மனந்திரும்பவும் ஜெபிப்போம்.

### சர்ப்பங்கள் மேல் அதிகாரம்

*கர்நாடகா மாநிலம், ஹுப்ளி பிராந்தியத்திலுள்ள முண்ட்கோடு பணித்தளத்தில் ஊழியம் செய்து வரும் சுதேச ஊழியர் எல்லாப்பாவின் வீட்டின் கதவின் ஓரத்தில் பெரிய கருநாகம் ஒன்று சுருண்டு படுத்திருந்தது. அதை அறியாத எல்லாப்பாவின் மனைவி பலமுறை வீட்டின் உள்ளே போவதும் வெளியே வருவதுமாக வேலை செய்து கொண்டிருந்தார். கடைசியாக வீட்டின் வெளியே இருந்து பொருட்களை உள்ளே கொண்டு வரும் போது விஷ பாம்பின் மீது கால் வைத்து விடவே அது சீறிக்கொண்டு எழுந்தது. பயத்தில் இயேசுவே என்று சொல்லிக் கொண்டு பின்வாங்கிய எல்லாப்பாவின் மனைவியை அந்த கொடிய தாக்குதலிலிருந்து தேவன் தப்புவித்தார். பிறகு அது அடித்து கொள்ளப்பட்டது. பாம்பின் வாயை கட்டிப்போட்ட தேவனை குடும்பமாக துதித்து நன்றி கூறினார்கள். அல்லேலூயா!*

**அக்டோபர்**
**12**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. சோன்பு சிங்சன் G.

## ஜார்க்கண்ட்

### சிந்தூரியா: பெஞ்சமின் ஜோதி & புஷ்பிதா ராணி

**துதிக்க:** 9 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சராக ஏற்றுக்கொண்டுள்ளனர். வீடுகள் தோறும் நற்செய்தி பகிரும் திட்டத்தில் இரண்டு கிராமங்களில் சுமார் 162 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டு 58 பேருக்கு ஜெபம் ஏறெடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் கூடுகை எவ்வித இடையூறுமின்றி சிறப்பாக நடைபெற்றுள்ளது. இப்பணித்தளத்தில் தேவன் தந்துள்ள நல்ல மழைக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகனை இழக்கக் கொடுத்துள்ள புதிய விசுவாசி பிரகாஷின் ஆறுதலுக்காக; பட்கர்கோடா கிராமத்திலுள்ள விசுவாசிகள் வேலையினிமித்தம் வேறு மாநிலங்களுக்கு செல்வதால் அக்கிராமத்தில் ஆலய ஆராதனை தடைப்பட்டுள்ளது. தங்கள் சொந்த கிராமங்களிலேயே விசுவாசிகளுக்கு நல்ல வேலை வாய்ப்புகளை தேவன் கட்டளையிடவும், கிராமத்தில் தங்கியிருப்போருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படவும், சுதேச ஊழியர்களான மனோஜ் மற்றும் பிபின் ஆகியோரை தேவன் வல்லமையாய் பயன்படுத்தவும் ஜெபிப்போம்.

### தல்பும்கட்: வகேரா பிரமோத் குமார் & ஜஷோதாபேன்

**துதிக்க:** அடிக்கடி மயங்கி கீழேவிழுந்த மாக்ரி கிராமத்தைச் சேர்ந்த மகி முர்முவுக்கு தொடர் ஜெபத்தின் மூலம் தேவன் பரிபூரண சுகமருளினார். இந்தாண்டு தேவன் நல்ல மழையைக் கட்டளையிட்டுள்ளார். அநேக வருடங்களாக குழந்தையின்றி தவித்து வந்த தீபக் ஹன்ஸ்தா தம்பதியினருக்கு ஜெபத்தினால் குழந்தை பாக்கியத்தைத் தந்து ஆசீர்வதித்துள்ளதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவின் மீது வாஞ்சை காட்டும் மவுடசோல் கிராமத்தைச் சேர்ந்த சோலன் கிஸ்கு மற்றும் பக்டிசோல் கிராமத்தைச் சேர்ந்த டுப்பா கிஸ்கு விரைவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட; நற்செய்திப் பணியில் ஆர்வம் காட்டும் அர்ப்பணமுள்ள ஊழியர்களை தேவன் எழுப்பித்தர; பலவித பெலவீனங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சாம்ராய், சாம், சுராணாராம் மற்றும் பார்வதி முர்முவுக்கு தேவன் பரிபூரண சுகத்தைக் கட்டளையிட; திட்டமிடப்பட்டிருக்கும் சபை மூப்பர் பயிற்சி, விசுவாசிகளின் ஆவிக்குரியக் கூடுகை ஆகியவை தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

## பிசாசின் தலையை நசுக்கின தேவன்

*மத்தியப்பிரதேசம், துல்கோட் பணித்தளத்தி லுள்ள பிப்ரானா கிராமத்தில் வசித்து வந்தவர் 28 வயது ஜெல்லி. திருமணமான இவர் பிசாசின் பிடியினால் தாக்கப்பட்டு 3 மாதங்களாக சங்கிலிகளினால் கட்டப் பட்டிருந்தார். அவரது குடும்பத்தினர் பல மந்திவாதிகளிடம் அவளை அழைத்துச் சென்றும் பணம் செலவழித்து பூஜைகள் செய்தும் விடுதலை கிடைக்கவில்லை. இறுதி யில் அவரை சிரோன்டிமால் கிராமத்தில் நடைபெற்ற ஜெபக் கூட்டத்திற்கு அழைத்து வந்தபோது அவளுக்காக நம் விசுவாசிகள் கண்ணீரோடு ஜெபித்தனர். ஜெபத்தைக் கேட்ட தேவன் அந்நேரமே அவளுக்கு பூரண விடுதலையை கட்டளையிட்டார். இவ்வற்புதத்தின் மூலம் அநேகர் தேவனை விசுவாசித்தனர். தேவனுக்கு மகிமை உண்டாவதாக!*

## அக்டோபர் 13 ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அனுஷ் பீட்டர் ஜெபராஜ்
திருமதி. தெபோராள் விஜயராணி எட்வர்ட்

### ஜமா:

**முன்னா மொகந்தியர் & சுமித்தா தாஸ்**

**துதிக்க:** புதிதாக 13 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 2560 பேர் முதன்முறையாக சுவிசேஷத்தைக் கேட்டுள்ளனர். 5 இடங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டுள்ளது. மகிமா சோரன் ஜெபத்தின் மூலம் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். தீவிர மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப் பட்டிருந்த ராகுல் டுடு ஜெபத்தினால் சுகம் பெற்றார். கால் வீக்கத்தினால் நடக்கமுடியாமலிருந்த கமோடி சோரன் குணமடைந்தார். வாகன விபத்திலிருந்து நிக்கலஸ் ஹன்ஸ்தக்கை அற்புதமாய் பாதுகாத்து புது ஜீவனை தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புற்று நோயிலிருந்து தாலா மராண்டி, கால் எலும்பு முறிவிலிருந்து அந்தோனி சோரன், ஒரு வருடமாக கண்பார்வை குறைவினால் கஷ்டப்படும் சஞ்சய் மராண்டி ஆகியோர் சுகம் பெற; மந்திர வேலைகளை செய்து வரும் லுக்கிராம் ஹெம்ரோம் மனந் திரும்பி இரட்சிக்கப்பட; மான்கா கிராமத்தைச் சேர்ந்த மிகில் மராண்டி, சுக்பாரி கிராமத்தைச் சேர்ந்த குவார் டுடு ஆகியோர் இயேசு கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; சபை மூப்பர்கள் மற்றும் சபை விசுவாசிகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆழமாய் வளரவும், தேவன் அவர்களை ஊழியத்தில் வல்லமையாய் பயன்படுத்தவும் ஜெபிப்போம்.

### மால்தோ வாலிபர் ஊழியம்:

**காட்வின் கிருபாகரன் & பிரபா கமலி**

**துதிக்க:** 49 வீடுகளில் உள்ள வாலிபர்களை நேரில் சந்தித்து வாலிபர் கூட்டத்திற்கான அழைப்பு கொடுக்க தேவன் கிருபை செய்தார். 5 இடங்களில் நடத்தப்படவிருக்கும் சபை வாலிபர் உயிர் மீட்சி கூட்டங்களின் ஆசீர்வாதத்திற்காக ஒருநாள் உபவாச ஜெபம் நடத்தப்பட்டது. வாலிபர்களுக்கென்று வேதாகம விளக்கவுரை வகுப்புகள் நடத்த தேவன் உதவி செய்தார். 9 இடங்களில் வாலிப சகோதரர்கள் மற்றும் 5 இடங்களில் வாலிப சகோதரிகளுக்கான ஜெபக் குழுக்கள் ஆரம்பிக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முன்னேற்றமின்றி காணப்படும் தவனா திருச்சபையின் வளர்ச்சிக்காக வாலிப தலைவர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்த; சபையின் விசுவாசிகள் மற்றும் மூப்பர்கள் வாலிபர்களை ஊழியத்திற்கு உற்சாகப்படுத்த; தன்னார்வலர்களாக இணைந்துள்ள வாலிப சகோதர சகோதரிகளை தேவன் ஆசீர்வதிக்க; ஊழியத்திற்கு தேவையான குறும்படம், நாடகம், பாடல்கள் போன்றவைகள் தரமான முறையில் சிறப்பாக தயாரிக்கப்பட ஜெபிப்போம்.

## அக்டோபர் 14 திங்கள்

### பாக்குரியா:
### இம்மானுவேல் முர்மு & நிலா ஹஸ்தா

**துதிக்க:** புதிதாக 17 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 1200 பேர் முதன்முறையாக நற்செய்தி கேட்டனர். 4 இடங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டுள்ளது. 13 பேர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கையிட்டனர். வலிப்பு நோயிலிருந்து பிரதீப் மரையா ஜெபத்தினால் சுகம் பெற்றார். விசுவாசிகள் பயிரிட போதுமான மழையை தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தல்தலி கிராமத்தைச் சேர்ந்த சுந்தரி முர்மு மனநிலை பாதிப்பிலிருந்து சுகம்பெற; வலது பக்க பக்கவாதத்திலிருந்து போகன் ஹஸ்தாவுக்கு தேவன் பூரண சுகமருள; இரண்டரை வயது எலியாஸ் டுடுவின் இருதயத்திலுள்ள ஓட்டை மறைய; வாய் புற்றுநோய் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கிரிஷினா ஹஸ்தக் சுகம்பெற; சுர்ஜுடி கிராமத்தில் ஆராதனை நடத்தவிடாமல் தடைசெய்யும் ரோஸ்னல் ஹன்ஸ்தா மனந்திரும்ப; அறுவடைக்குத் தேவையான மழையை தேவன் பொழிந்தருள; சபை மூப்பர்களையும், சுதேச ஊழியர்களையும் தேவன் ஊழியத்தில் வல்லமையாய் பயன்படுத்த ஜெபிப்போம்.

### மண்ட்ரோ & பகையா மாணவர் விடுதி: கென்னடி சிங் & ஹயோஜம் லின்தோய்பி

**துதிக்க:** 7 புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கவும், 17 பேரை கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கவும் தேவன் கிருபை செய்தார். நாடகம் மூலம் கத்தி கார், மணிஹரி ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. பூல்குமாரி மற்றும் தோடோபாடோவை பாம்பு கடியிலிருந்து தேவன் பாதுகாத்தார். சாம்சன் ஹெம்ரோம் பக்கவாதத்தி லிருந்தும், ஜோலி சோரன் வலிப்பு நோயிலிருந்தும், ரஞ்சித் முர்மு நெஞ்சு வலியிலிருந்தும் ஜெபத்தினால் சுகம் பெற்றனர். விடுதி மாணவர்களுக்கு தேவன் அருளிய சரீர சுகம் மற்றும் பிரயாண பாதுகாப்பிற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாலஜோர், மாஹி ஆகிய இடங்களில் கட்டப்பட்டு வரும் ஆலயக் கட்டுமானப் பணிகள் விரைவில் முடிவடைய; பிற இயக்கத்தினர் மூலம் விசுவாசிகளுக்கு வரும் தடைகள் நீங்கவும், விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவும்; ராம்புனி, போர்டோலா, தியாரா, சிமாரா ஆகிய இடங்களில் ஆலயம் கட்ட ஏற்ற இடம் கிடைக்க; பிரமோத் ஹெம்ரோம் & ரபிந்தர முர்மு மனநலப் பிரச்சனையிலிருந்தும், ஹோபோன் மசி கர்ப்பப்பைப் புற்றுநோயிலிருந்தும் விரைவில் குணமடைய; முதன் முறையாக 10-ம் வகுப்பு தேர்வு எழுதவுள்ள நம் விடுதிப் பிள்ளைகள் செபஸ்டின், சில்பானுஸ் ஆகியோரை தேவன் ஞானத்தினால் நிரப்ப; அமித் மராண்டி, கிளாட்சன் முர்மு மற்றும் ராஜேஷ் பாஸ்கி விரைவில் விடுதிக்கு திரும்பி வர ஜெபிப்போம்.

## அக்டோபர் 15 செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. பாகி சதீஷ்

### பகையா:

**ஜெபக்குமார் & பொன்லதா**

**துதிக்க:** பதலா கிராமத்தில் 4 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபம் விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாக அமைந்தது. பதலா கிராம சபையில் நமது விசுவாசிகள் சுதந்திர தினத்தன்று கொடியேற்றி நாட்டுக்காக விசேஷ ஜெபத்தை ஏறெடுத்தனர். நடைபெற்ற பெண்கள் கூடுகையில் 50 விசுவாசிகளும், வாலிபர் கூடுகையில் 25 வாலிபர்களும் கலந்து கொள்வதற்கு கர்த்தர் கிருபை செய்ததற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** பதலா கிராமத்தில் நமது ஊழியத்திற்கும், விசுவாசிகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்து வரும் முனிலால், ராஜு, தஸ்ரத், ஜெகதீஸ், சங்கர், ரகுனாத், மகேஷ், கட்டுவா, நெப்புலா, சுனில், பப்பு லக்டா ஆகியோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; நமது ஆலயத்திற்கு முன்பாக மதுகடை நடத்திவரும் திலீப் லக்டா இரட்சிக்கப்பட; ஆவிக்குரிய வாழ்வில் பின்மாற்றமடைந்துள்ள பைசா கிராமத்தைச் சேர்ந்த சில விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர் வீரேந்தர் குஜுர் ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; விசுவாசிகளை தவறான வழியில் நடத்தும் ஆல்பர்ட் குஜுர் மற்றும் மீனா லக்டா குடும்பத்தினர் தேவனால் தொடப்பட; மசூரியா கிராமத்தில் விரைவில் ஆலயம் கட்டப்பட ஜெபிப்போம்.

### போடுவா விடுதி:

**சோன்பு சிங்சன் & டிங்நய்நேங்**

**துதிக்க:** காலாண்டு தேர்வை அனைத்து மாணவர்களும் சிறப்பாக எழுத தேவன் கிருபை செய்தார். காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருந்த குய்போ என்ற சிறுவன் சுகம் பெற்று தேர்வு எழுத தேவன் உதவி செய்தார். தினமும் 6 கி.மீ. பயணம் செய்து பள்ளிக்கு சென்றுவரும் மாணவர்களுக்கு தேவன் தந்து வரும் பாதுகாப்பிற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மருத்துவ சிகிச்சைக்காக தங்கள் வீடுகளுக்குச் சென்றுள்ள குய்போ, ரோகித் மற்றும் தேவா நல்ல உடல் நலத்துடன் விடுதிக்கு திரும்ப; அடிக்கடி ஏற்படும் மின்தடைகள் நீங்கி சீரான மின்சாரம் கிடைக்க; சிரங்கு நோயினால் கஷ்டப்பட்டு வரும் விசால் மற்றும் சைலாஸ் விரைவில் சுகம் பெறவும், பிற மாணவர்களுக்கு இந்த நோய்த் தொற்று ஏற்படாதபடி விடுதி பிள்ளைகளை தேவன் பாதுகாக்கவும் ஜெபிப்போம்.

### சோட்டாகக்ரி:

**சுதாகரன் (ஓய்வு) & ஃப்ளாரன்ஸ்**

**துதிக்க:** ஆவிக்குரிய மறுமலர்ச்சி கூடுகையும் மற்றும் மூன்று நாட்கள் சுதேச ஊழியர்களின் குடும்பக் கூடுகையும் ஆசீர்வாதமாய் நடைபெற தேவன் கிருபை செய்தார். இந்தாண்டு தேவன் தந்த நல்ல பருவமழைக்காகவும், மழைக் காலங்களில் வரும் நோய்த் தொற்றிலிருந்து ஊழியர்கள் மற்றும் விசுவாசிகளை தேவன் பாதுகாத்து வருவதற்காகவும் அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கவிருக்கும் மேற்கு சந்தால் ஊழியர்களுக்கான பயிற்சி, ஜெபக்குழு தலைவர்கள் பயிற்சி மற்றும் வாலிபர் முகாம் தடையின்றி திட்டமிட்டபடி நடைபெற; மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்கள் கலந்து கொள்ளும் மூன்று நாள் உபவாச ஜெபம் நல்ல பலனை தர; வாகன விபத்தில் கால் எலும்பு முறிவு ஏற்பட்டு நடக்க முடியாமலிக்கும் சபை மூப்பர் டேவிட் மராண்டி விரைவில் பரிபூரண சுகம்பெற ஜெபிப்போம்.

## அக்டோபர் 16 புதன்

உபவாச ஜெபநாள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. விஜயராணி ரூபன் ரவி

திரு. சுச்சாவோ S.

### பர்ஹர்வா & பத்னா சிறுமியர் விடுதி:

**பீட்டர் பிரபாகரன்& விமலா; வசாவா அருணாபேன், சிங் நய் சியான்**

**துதிக்க:** 3 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் 60 பேர் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிக்க தேவன் உதவி செய்தார். ஊழியத்தை முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த மரியம் கிஸ்கு சென்ற ஆட்டோ விபத்துக்குள்ளான போது அற்புதமாய் தேவன் அவரை பாதுகாத்தார். நல்ல மழையைக் கட்டளையிட்ட கர்த்தருக்கு நன்றி பலிகளை செலுத்தி விசுவாசிகள் தேவனை மகிமைப்படுத்தினர். பாம்பு கடியிலிருந்து கோமல் முர்மு மற்றும் எஸ்தர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருச்சபையில் பிரிவினையை உண்டுபண்ணுகிற சக்னேல் முர்மு மனந்திரும்ப; சுரேங்கா மற்றும் கேஸ்ரோ கிராமங்களில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; செவிலியர் படிப்பை படித்துக் கொண்டிருக்கும் நமது விடுதி மாணவிகள் சிறந்த முறையில் படித்து நல்ல வேலை வாய்ப்புகளைப் பெற, தேவன் அவர்களை ஆசீர்வதிக்க; திருமணத்தினால் விசுவாசத்தை விட்டு விலகும் நமது வாலிபர்களுக்கு விசுவாசிகளான வாலிபர்கள் வாழ்க்கைத் துணையாய் கிடைக்க; ஆலயக் கட்டிடங்களைப் புதுப்பிப்பதற்கு உள்ளூர் மற்றும் வருவாய் துறையில் அனுமதி வாங்க வேண்டியுள்ளதால் பழைய ஆலய கட்டிடங்கள் பராமரிப்பின்றி இருக்கும் நிலை மாற ஊக்கத்தோடு ஜெபிப்போம்.

### தீன்பஹார்:

**நெகேமியா & அனாமிகா பெகு**

**துதிக்க:** விகாஸ் மற்றும் பிரதிமா ஆகியோர் ஜார்கண்ட் மாநில காவல் துறைத் தேர்வில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற்றார்கள். பெல்பஹாடி கிராமத்தினர் சுவிசேஷத்திற்கு வாஞ்சைக் காட்டுகின்றனர். பிசாசின் பிடியினால் அவதிப்பட்ட ராகுல் லக்ராலுக்கு ஜெபத்தினால் விடுதலை தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மனநோயினால் பாதிக்கப் பட்டுள்ள அன்கிதா டாபூ, நாராயண் ஆகியோரை தேவன் குணப்படுத்த; பிசாசின் பிடியினால் தூக்கமின்றி உடல் நல பாதிப்பிலிருக்கும் ரிங்கி முண்டா விடுதலை பெற; தாடாபாடா கிராமத்தில் ஊழியத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பிரதீர் டாபூ, திலீர் டாபூ, ரீனா மற்றும் பெல்பஹாடி கிராமத்தின் ராஜேஷ் டாபூ மற்றும் சஞ்ஜய் ஆகியோர் தேவனால் தொடப்பட; கேல்பாரா கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற இடத்தை தேவன் அருள ஜெபிப்போம்.

## அக்டோபர் 17
### வியாழன்

## லிட்டிபாடா: எபினேசர் சாமுவேல் & மேபல் ஃபிளாரன்ஸ்

**துதிக்க:** 7 கிராமங்களில் முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். கும்பார்பாஜா கிராம சபையில் வாலிபர்களுக்கு திடப்படுத்தல் வகுப்புகள் நடத்தப்பட்டு திருவிருந்து கொடுக்கப் பட்டது. விசுவாசிகளின் ஜெபத்தின் மூலம் சபை மூப்பர் கொர்நேலியஸ் விஷ பாம்பின் கடியிலிருந்து பாதுகாக்கப்பட்டார். சபை மூப்பர் எட்வர்ட் ஹெம்ரோம் உயர் இரத்த அழுத்தத்தினால் ஏற்பட்ட பக்கவாதத்திலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இனம்புரியாத வியாதியினால் பாதிக்கப்பட்டுள்ள ஜாம்குந்தர் கிராமத்தின் டுலாத் கிஸ்கு விரைவில் சுகம்பெற; ஜகதீஸ்வர், ராம்பூர், சோகுல், கோகாடா, மகர்லாங், காம்ரியா, கைரியா ஆகிய புதிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட; சபை மூப்பர்களின் குடும்பத்தினர் கிராமத்தில் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ; திட்டமிடப் பட்டுள்ள வாலிபர் முகாம், பெண்கள் கூடுகை மற்றும் சபை மூப்பர் பயிற்சி ஆகியவை சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## ஹன்ஸ்டிகா: செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** கங்குவாரா சபை விசுவாசி நெல் மூட்டையுடன் இரயிலில் ஏற முயற்சிக்கும் போது கீழே விழுந்தாலும் தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். லுசியா கிராம சபையினர் ஆகஸ்டு 15-ம் தேதி தேசத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தனர். சோட்கா ஹெம்ரோமின் அடக்கத்தில் ஏற்பட்ட பிரச்சனை நீங்கி அடக்க ஆராதனை நல்லமுறையில் நடைபெற்றது. மருத்துவர் களால் கைவிடப்பட்ட நிலையிலிருந்த லுசியா கிராமத்தின் ஸ்ரீமதியை தேவன் குணப்படுத்தி வருவதற்காய் அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முடக்கவாதத்திலிருந்து ராஜேந்திர சோரன் பூரண சுகம்பெற; விசுவாசத்தில் பெலவீனப்பட்டுள்ள ராஜேந்தி சோரன் விசுவாசத்தில் பெலப்பட; சோட்கா ஹெம்ரோமின் மாமனார் பப்லு சோரன் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள; சர்காரா கிராமத்தினர் மூலம் அதிக உபத்திரவங்களை அனுபவித்து வரும் மஹாதேவை தேவன் பெலப்படுத்தவும், விசுவாசத்தில் உறுதியா யிருக்கவும் ஜெபிப்போம்.

## தேவனின் தொடுதல்

*குஜராத் மாநிலத்தின் சோட்டா உதய்பூர் மாவட்டத்திலுள்ள போடோலி பணித்தளத்தி லுள்ள ஒரு நல்ல ஜெப வீராங்கனை ரீனாபேன். கர்த்தரின் கிருபையால் கர்ப்ப மடைந்த அவருக்கு கர்ப்பப்பையில் கர்ப்பம் தங்காமல், கர்ப்பக்குழாயில் தங்கினது. இது மருத்துவப் பரிசோதனையில் நாளடைவில் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கர்ப்பம் உயிருக்குத் தீங்கு விளைவிக்கும் ஆகவே கர்ப்பத்தைக் கலைத்துவிடலாம் என்று மருத்துவர்கள் அறிவுரை சொல்லியும் ரீனாபேன் தேவன் மீதிருந்த விசுவாசத்தினால் அதனை மறுத்து ஜெபம் செய்ய ஆரம்பித்தார். ஒருநாள் இரவு தன் கணவரோடு சேர்ந்து ஜெபம் செய்துகொண்டிருந்த போது வயிற்றினுள் ஏதோ புரண்ட மாதிரி உணர்ந்தார், மேலும் தாங்கொண்ணா வேதனை அடைந்தார். இருந்தாலும் ஜெபத்தைத் தொடர்ந்தார். வேதனை மட்டுப்பட்டது. மறுநாள் மருத்துவ மனைக்குச் சென்று பரிசோதனைகள் மேற்கொள்ளும்போது வளர்ச்சி அடைந்து கொண்டிருந்த சிசு கர்ப்பக் குழாயிலிருந்து கர்ப்பப்பைக்கு இடம் மாறி விட்டதை அறிந்து தேவனைத் துதித்தார். தேவன் செய்த இந்த அற்புதத்திற்காக அவரைத் துதிப்போம்.*

**அக்டோபர் 18 வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுமிதா தாஸ் மொஹன்தியர்
திரு. ஸ்ரீதர் மொபிடெனி

### மஹாரோ:
### இம்மானுவேல் கார்த்தி & ஜோதி லக்ஷ்மி

**துதிக்க:** 10 கிராமங்களில் பின் தொடர்பணி செய்யவும், 64 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கவும் தேவன் உதவி செய்தார். 5 இடங்களில் இரவுக் கூட்டங்கள் தடையின்றி நடைபெற தேவன் கிருபை செய்தார். சுகவீனமாயிருந்த ஊழியரின் மனைவி சுகம் பெற்று பணித்தளம் திரும்ப தேவன் கிருபை செய்தார். இப்பணித்தளத்தில் ஊழியம் செய்யும் மங்களா டெஹ்ரி என்ற சுதேச ஊழியர் குடும்பம், தன்னார்வ ஊழியர் ஆனந்தி புஜார் ஆகியோரை தேவன் வல்லமையாய் பயன்படுத்தி வருகிறதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மந்திரவாதியான மஹாலக்ஷ்மி யின் கணவர் மற்றும் அவரது பிள்ளைகள் கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; இரண்டு சிறுநீரகங்களில் கற்களாலும், கர்ப்பப்பை நீர்கட்டிகளாலும் அவதியுறும் சுந்தரி தேவியை தேவன் குணப்படுத்த; நிலப்பிரச்சனையிலிருந்து லால் மோஹன், கோட்டோ, பஞ்சு, நெவைனி, ராஜு ஆகியோருக்கு தேவன் நீதி செய்ய; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் உள்ளூர் தலைவர்கள் பாபுலால், சாது, பாமாய், ராஜேஷ், சுரேந்திரநாத், பீஹாரி புஜார் ஆகியோர் மனந்திரும்பி இரட்சிக்கப்பட; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

### பாக்குவாஹாட்:
### ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** புதிதாக 20 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு சுவிசேஷ பிரதிகள் விநியோகிக்கப்பட்டதோடு 85 குடும்பங்களை நேரில் சந்தித்து இயேசுவின் அன்பைப் பற்றி அவர்களிடம் பகிர்ந்து கொள்ள தேவன் கிருபை செய்தார். 16 இடங்களில் இயேசு திரைப்படம் திரையிடப்பட்டது. மனக்பூர் சபை மூப்பர் சமோல் ஹெம்ரோமின் அடக்க ஆராதனை கிராம மக்களின் உதவியின்றி விசுவாசிகளின் ஒருமனப்பாட்டுடன் அனைத்து காரியங்களையும் செய்து முடிக்க தேவன் கிருபை செய்தார். கெட்ட கனவுகளினால் தூங்கமுடியாமல் உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த சகோதரி பஹா மார்டிக்கு ஜெபத்தினால் நல்ல நித்திரையைக் கட்டளையிட்ட தேவனைத் துதிப்பாம்.

**ஜெபிக்க:** சல்போனா, உத்தர்கர்மா, உலர்தூர், பட்டோடாலா கிராம விசுவாசிகள் தங்கள் உறவினர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க எடுக்கும் முயற்சிகளை தேவன் ஆசீர்வதிக்க; மனிக்பூர் சபைக்கு ஊழியத்தில் வாஞ்சையுள்ள சபை மூப்பரை தேவன் எழுப்பித் தர; நடைபெற்று வரும் பெண்கள் கூடுகை, சிறுவர் வேதாகம வகுப்புகள், சிறு ஜெபக்குழுக்கள் ஆகியவை தடையின்றி கிரமமாக நடைபெற; விசுவாசத்தைவிட்டு பின்வாங்கியுள்ள சுங்கி முர்மு, சுனில் ஹெம்ரோம், காலு சோரன், முனி சோரன், ராஜீவ் முர்மு, நிர்மல் டுடு ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## அக்டோபர் 19 சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஹவிலா பரமானந்த்

### சம்சி:
### தீப் ரத்னா & மித்லேஷ்

**துதிக்க:** ஜித்தால் கிராமத்தைச் சேர்ந்த ஒரு விசுவாசி வேலையினிமித்தம் வேறு மாநிலத்திற்கு புலம்பெயர்ந்துச் சென்றவர் காணாமல் போன நிலையில் ஜெபத்தின் மூலம் ஓராண்டிற்குப் பிறகு சுகத்துடன் வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார். பெமை கிராமத்தின் பூஜன் மிசர் மரணப்படுக்கையில் இயேசு கிறிஸ்துவை அறிக்கையிட்டு ஜீவனை விட்டார்; தற்போது அவரது குடும்பத்தினர் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஆராதனையில் பங்கு பெற்று வருகிறார்கள். சந்த்பூர் என்ற புதிய கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கவும், சுமார் 200-க்கும் மேற்பட்டோர் நற்செய்தி கேட்கவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்திற்கு அதிக எதிர்ப்பு தெரிவித்து வரும் பாட்கு மராண்டி, ரோபி ஹன்ஸ்தா, லுக்கிராம் மராண்டி, சஞ்ஜய் டுடு, லக்கான் டுடு ஆகியோர் கர்த்தரின் அன்பினால் தொடப்பட; விசுவாசிகளின் எண்ணிக்கை அதிகமாயிருப்பதால் வாரி கிராம ஆலயம் விரிவாக்கம் செய்யப்படுவதற்கு ஏற்ற இடம் கிடைக்க; பெட்கடா, டியாடாலா, கமல்டாபூர் மற்றும் ஜோத்கர் கிராமங்களில் நடத்தப்படவிருக்கும் நற்செய்திக் கூட்டங்களின் மூலம் திரளான ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவை மெய்யான தேவனென்று அறிந்து விசுவாசிக்கவும் ஜெபிப்போம்.

### கரன்டிகி:
### கய்தியென்ஜின் வய்ஃபெய் & மெலடி டிம்சோன்டிங்

**துதிக்க:** 10 புதிய கிராமங்களில் சுமார் 220 பேருக்கு சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. குண்டர்காவோ பகுதியில் சுவிசேஷத்திற்கு தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். ஜுனோகட்டோ கிராமத்தைச் சேர்ந்த விசுவாசியான லொக்கோன் மராண்டி மனநிலை மற்றும் சரீர பாதிப்பிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதால் அவர் குடும்பமாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். கல்லீரல் பிரச்சனையினால் அவதியுற்ற சுதேச ஊழியர் ஜெத்து ஹெம்ரோமை தேவன் குணப்படுத்தினதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சத்னிகுட்டு கிராமத்தில் மீண்டும் ஆராதனை துவங்கப்பட; புதிய விசுவாசிகள் தேவனுக்கு சாட்சியாய் வாழ; 17 கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்திடும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள லோக்கன் மராண்டி, பிஜய் முர்மு, மஞ்ஜி ஹஸ்தா, சோமி சோரன், ஹொப்பன் ஹஸ்தா ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; நான்கு வயதாகியும் பேசவும், நடக்கவும், உட்காரவும் முடியாமலிருக்கும் சுதீப் முர்முவுக்கு தேவன் அற்புதம் செய்ய; தாலு கிஸ்கு, சீடாய் டுடு, மூன்குஷி மற்றும் சோப்பேல் முர்மு விரைவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய ஜெபிப்போம்.

**அக்டோபர் 20 ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மார்த்தா சோரேன்

Ms. விஜிதா

# அஸோம்

## கோகாமுக் & தகுவாகனா:

**டென்சிங் & கவிதா**

**துதிக்க:** 4 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கையிட்டுள்ளனர். விடுமுறை வேதாகமப் பள்ளியில் அநேக சிறுவர்கள் உற்சாகத்துடன் பங்குப் பெற்றார்கள். பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டிருந்த அல்பா மற்றும் பல்லவிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினார். சோக்யா சப்ரி கிராம விசுவாசிகள் தாங்களாகவே ஒரு சிற்றாலயத்தைக் கட்டி தேவனை ஆராதித்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பான்சிராம்சக், பாக்கூர்காட், பாலிசப்ரி, புயுண்டுகசம் ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க திறந்த வாசலை தேவன் கட்டளையிட; சுவிசேஷத்திற்கு வாஞ்சைக்காட்டும் தன்சுக், பித்தாவாலி, நாத்துான் ஜாய்சுங் ஆகியோர் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கையிட; சிறுநீரக புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள பிலாஸ்வர் பேன், வயிற்று வலியினால் கஷ்டப்பட்டு வரும் டிஸ்கு பெகும் மற்றும் மோகா ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; மிஷனெரியின் மகள் லிசா மிராக்லினுக்கு கொடுக்கப்படும் 4-வது ஹீமோதெரப்பி சிகிச்சையின் மூலம் புற்றுநோயின் கிருமிகள் முழுவதும் அழிக்கப்பட ஊக்கத்தோடு ஜெபிப்போம்.

## கோஹ்பூர்:

**நாத்தான் குமார் பெபர்த்தா & நிருபோமா**

**துதிக்க:** மூன்று பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கையிட்டனர். போர்டாமுலி கிராமத்தில் நடைபெற்ற விசுவாசிகள் கூடுகையில் 55 பேர் கலந்து கொண்டனர். இடி தாக்குதலிருந்து விசுவாசி புல்கவுர் மற்றும் அவரது மகனை தேவன் அற்புதமாய் பாதுகாத்தார். வலிப்பு வியாதியினால் அவதியுற்ற பிரன்ஜோல் டோலேயின் பெற்றோர் தேவனை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட போது தேவன் அவனுக்கு பூரண சுகமருளினார். 5 இடங்களில் நடைபெற்ற இரவுக் கூட்டங்களில் அநேகர் கலந்து கொண்டு இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சோராய்பாரி கிராமத்தில் நடைபெறவுள்ள படக்காட்சி ஊழியத்திற்காக; இரவுக் கூட்டங்கள் எவ்வித தடையுமின்றி நடைபெற; சபை மூப்பர் பயிற்சி கிரமமாக நடத்தப்பட; பூர்ணிமா, தெபோநாத், ரோகுநாத் டோலே, போடேஸ்வார் மற்றும் அவரது மனைவி தேவனை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

அக்டோபர்
21
திங்கள்

## ஒடிசா

### தெல்கோய்:

**சுகின்லால் & ஜெயராணி**

**துதிக்க:** 6 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு அவரின் மந்தையில் இணைந்துள்ளனர். சிறுநீரகப் பிரச்சனையினால் பாதிக்கப் பட்டிருந்த சுதேச ஊழியர் சுக்தேவ் ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்றார். பிசாசின் ஆதிக்கத்திலிருந்து சுக்காரா சாட்டர் ஜெபத்தினால் விடுதலை பெற்றார். தேவன் தந்துள்ள நல்ல மழைக்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடைபெறவுள்ள பெண்கள், வாலிபர் முகாம்கள் மற்றும் கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழ்ச்சிகள் தடையின்றி ஆசீர்வாதமாய் நடைபெற; ஜித்தன் மன நோயிலிருந்தும், அருண் முண்டா வலிப்பு நோயிலிருந்தும் குணமடைய; ஊழியத் திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஜெயாபுர்த்தி, துரா முண்டா, சத்ரு முண்டா, வாவன் கிஷான், சுக்தேவ் கிஷான் ஆகியோர் மனந் திரும்பி இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

### கியோன்ஜர்: பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா

**துதிக்க:** 43 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு திருச்சபையில் இணைந்தனர். காளிபடி கிராமத்தில் 2 வயது சிறுவன் சோனா முண்டாவை இறந்த நிலையில் ஆலயத் திற்கு கொண்டுவந்த போது விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத்தினால் மீண்டும் உயிருடன் எழும்ப தேவன் கிருபை செய்தார். விசுவாசி பைதர் வாகன விபத்திலிருந்து அற்புதமாய் பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாம்பரி கிராமத்தில் சுவிசேஷத் திற்கு காணப்படும் எதிர்ப்புகள் மறையவும், எதிர்ப்பாளர்களால் தாக்கப்பட்ட விசுவாசி தசரத முண்டா விரைவில் சுகம்பெறவும், எதிர்ப்பாளர்கள் தேவனின் அன்பினால் தொடப்படவும்; பிசாசின் பிடியிலிருந்து லில்லி முண்டா விடுதலை பெற; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள ஹெமால் முண்டா விரைவில் பரிபூரண சுகம் பெற; ராஜோத், அத்தி, பனாமடி, திலீப் ஆகியோர் விசுவாசத்தில் வேரூன்றி வளர ஜெபிப்போம்.

## பரத்திலிருந்து வரும் உதவி

*ஹிமாச்சலப் பிரதேசம், காசியாபாத் மாவட்டம் ராம்பூர் பணித்தளத்தின் சாரி கிராமத்திலுள்ள கிறிஸ்துவை உண்மையாக நேசிக்கும் விசுவாசி கலாவதி. இவரது கணவர் கடந்த நான்கு வருடங்களாக புற்றுநோயால் பீடிக்கப்பட்டு இருந்ததால் அவர் சுகமடைய வேண்டி கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்து ஜெபித்து வந்தார். வாடகை வீட்டிலிருந்துகொண்டு பால் வியாபாரம் செய்து தன் பிள்ளைகளோடு கஷ்ட மான ஜீவனம் நடத்திவந்தார். அரசாங்கத்தின் மூலம் கட்டிக்கொடுக்கப்படுகிற வீட்டிற்கு விண்ணப்பித்திருந்தார். இந்நிலையில் ஒருநாள் அவரின் கணவர் இறந்து விட்டார். உடல் அடக்கம் செய்த பின்னர், மறுநாள் வீட்டிலே ஸ்தோத்திரக் கூட்டம் வைத்த கலாவதி, கிறிஸ்து எப்படிப்பட்டவர் என்பதை கூடியிருந்த ஊர் மக்களுக்கு எடுத்து கூறி கணவரின் வாழ்க்கைக்காக நன்றி கூறினார். இப்படிப்பட்ட துக்க நேரத்தில் பாதிக்கப்பட்ட யாவரும் வெளியேகூட வராத சமுதாய சூழ்நிலையில், பொது இடத்தில் தேவனுக்கு நன்றி கூறிய நிகழ்வை ஊரே விசித்திரமாகப் பார்த்தது. அன்றே அரசாங்கத்தின் மூலம் கொடுக்கப்படுகிற வீட்டையும், கடைசி தவணையான ரூ.60 ஆயிரத்தையும் பெற்றுக்கொண்டார். அவருடைய மாடும் அன்றே ஆரோக்கியமான கன்று ஈனி ஆசீர்வாதத்தை மெருகூட்டியது. ஊராரின் மத்தியில் தேவனின் நாமம் மகிமையடைந்தது. அல்லேலூயா!*

அக்டோபர்
22
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெபராணி அசரியா ராஜ்குமார்
திருமதி. மரிதாய் லியோனா பிரத்யூஷ்

## ஜஷிப்பூர்: சாமுவேல் ஜே. & ஹவிலா பரமானந்த்

**துதிக்க:** 11 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்று அறிக்கையிட்டுள்ளனர். ஹடென்பேடா, டயர்ரிங், காந்திசோன் ஆகிய கிராமங்களில் புதிதாக ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு தடையின்றி நடைபெற்று வருகின்றன. பெலவீனத்தினிமித்தம் நீண்ட நாட்களாக படுக்கையிலிருந்த சர்மு முண்டா ஜெபத்தினால் சுகம் பெற்று வருகிறார். சணடிக்மாலா கிராமத்தில் விசுவாசி பகுராம் புர்த்தியின் விவசாய நிலத்தில் வேலை செய்ய கிராம மக்கள் யாரும் வராத சூழ்நிலையிலும் தடையின்றி வேலை நடக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சாண்டிக்மாலா கிராமத்தில் பூஜைக்கு பணம் கேட்டு விசுவாசிகளை கட்டாயப்படுத்தி வசூலிக்கும் மதவாதிகள் மனந்திரும்பி ஜீவனுள்ள தேவனை அறிந்து கொள்ள; பகுராம் கிராமத்தில் கிறிஸ்துவர்களின் நிலத்தில் வேலை செய்யக்கூடாது என்று விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் உடைக்கப்படவும், கிராமத்தின் கட்டுப்பாட்டுக்கு பயந்து ஆராதனைக்கு வரத்தயங்கும் விசுவாசி ரகு பிங்கா குடும்பம் கிறிஸ்துவில் பெலப்படவும்; பிசாசின் கட்டுகளினால் அவதிப்படும் சாந்தி புர்த்தி விடுதலை பெற; உத்ரஸ் கிராமத்தில் சுவிசேஷத்திற்குக் காணப்படும் எதிர்ப்புகள் நீங்கவும், எதிர்ப்பு தெரிவிக்கும் கிராம மக்கள் தேவனின் அன்பினால் தொடப்படவும் ஜெபிப்போம்.

## தேன்கனல்: அசோக் நாயக் & சுரபி நாயக்

**துதிக்க:** புதிதாக ராம்கிபார், மாரர்பாரா, கியோசாகி மற்றும் அல்லூரி கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பிசாசின் பிடியிலிருந்து மோகன் சர்தார் ஜெபத்தினால் விடுதலை பெற்றார். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமலிருந்த கணேஷ் பெங்கா ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள புதிய கிராமங்களில் விரைவில் ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட; வாகன விபத்தினால் காயம் ஏற்பட்டுள்ள லக்மா ஹெம்ரோம் மற்றும் தர்மேஸ்வர் விரைவில் சுகம்பெற; சுருபர்டி, மஞ்சு, ஜித்ரா, மோகன் ஆகியோர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை விரைவில் அறிக்கையிட ஜெபிப்போம்.

## *விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்*

*மத்தியப்பிரதேச மாநிலம், கார்கோன் பணித்தளத்திலுள்ள நவல்பூரா கிராமத்தைச் சேர்ந்த செலன் என்ற வாலிபன் குஷ்ட ரோகத்தினால் பாதிக்கப்பட்டு படிப்படியாக அவரது வலது கால் அழுகிப்போக ஆரம்பித்தது. மருத்துவ சிகிச்சை எடுத்து கொண்டபோதிலும் கால் அழுகிக் கொண்டிருப்பதை தவிர்க்க முடியாமல் மன உளைச்சலில் இருந்தார். இறுதியாக இயேசு கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டு நமது ஆலயத்திற்கு வந்தார். அவருக்காக விசுவாசிகள் கூடி ஊக்கத்தோடு ஜெபித்து வரவே சிறிது சிறிதாக அவரது காலில் உணர்ச்சி வர ஆரம்பித்ததோடு சில நாட்களுக்குள் பரிபூரண சுகம் பெற்று நடக்க ஆரம்பித்தார். தற்போது முற்றிலும் குணமாகி தேவனை மகிமைப்படுத்தி வருகிறார். அல்லேலூயா!*

## அக்டோபர் 23 புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெயந்தி கிரேஸ் ஜெபக்குமார்

### ராய்ரங்பூர்:
### குணா சந்திர பாய்க் & கிருட்டாஞ்சலி பாய்க்

**துதிக்க:** 8 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். இருதய அறுவை சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த காபிரியேல் குண மடைந்து வீடு திரும்ப தேவன் கிருபை செய்தார். பிசாசின் பிடியிலிருந்து சுக்லால் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். திடீரென்று சுயநினைவை இழந்த ராணி புர்த்திக்காக விசுவாசிகள் கூடி ஜெபித்த போது தேவன் சுகமருளினார். பெலவீனத்தி னிமித்தம் படுக்கையிலிருந்த பூணம் புர்த்தி ஜெபத்தினால் சுகம் பெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திட்டமிடப்பட்டுள்ள சபை மூப்பர் பயிற்சி, வாலிபர் முகாம், பெண்கள் கூடுகை, விசுவாசிகளின் ஆவிக்குரியப் பயிற்சி ஆகியவை தடையின்றி குறித்த நாளில் நடைபெற; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமலிருக்கும் அமேந்தரா மற்றும் பகத்சிங் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள; யானைக்கால் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள பாகிகத்ரி பரிபூரண சுகம்பெற; விசுவாசத்தை அறிக்கையிட ஆயத்தமாகியுள்ள 6 குடும்பங்கள் தடையின்றி கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக அறிக்கையிட ஜெபிப்போம்.

### ஜகன்நாத்பூர்: பாசுதேவ் மால்தோ & பசந்தி மால்தோ, சுரேஷ் மால்தோ, ஆபிரகாம் எஸ். & அலீஸ் ஷீபா

**துதிக்க:** 21 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு திருச்சபையில் இணைந்துள்ளனர். புதிதாக 28 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் கிருபை பாராட்டினார். இரண்டு நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபக் கூடுகையில் அனைத்து சபை சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் கூடி தேசத்திற்காக ஜெபிக்க தேவன் உதவி செய்தார். வாலிபர், பெண்கள், சபை மூப்பர் கூடுகைகள் ஆசீர்வாதமாய் நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரெபல்டோவா, புருசய், மஹாசிட்டாய் ஆகிய புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட; பான்டேபாடா கிராமத்தில் விசுவாசிகளுக்கான முகாம், ஹசுர்னியா கிராமத்தில் சபை மூப்பர்களுக்கான முகாம், பரம்ஜடா கிராமத்தில் வாலிபர்களுக்கான முகாம், பாஜகுட்டா கிராமத்தில் ஆத்தும ஆதாயப் பயிற்சி ஆகியவை தடையின்றி சிறப்பாய் நடைபெற ஜெபிப்போம்.

### ஞானம் அருளும் வேத வசனம்

*ராஜஸ்தான், காஜுவாலா பணித்தளத்தைச் சேர்ந்த ராஜ்பால் மற்றும் அவரது மகள் குர்பிரீத் இருவரும் வேத வசனங்களை ஆழமாய் கற்று வளரும் விசுவாசிகள். ஒருமுறை சிலர் வேதத்தை தவறாக போதித்து கொண்டிருந்த போது நமது விசுவாசிகள் தைரியமாக அவர்களிடம்* ***நீங்கள் கூறியது வேதத்தில் எங்கே எழுதப்பட்டுள்ளது காட்டுங்கள்*** *என்று கேட்டபோது அவர்களால் பதில் கூற முடியாமல் அங்கிருந்து சென்றுவிட்டனர். நமது விசுவாசிகளுக்கு தேவன் கொடுத்துள்ள பகுத்தறிவுக்காக அவரைத் துதிப்போம்.*

**அக்டோபர்**
**24**
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பியூலா ஜெபக்குமாரி பர்னபாஸ்
திருமதி. சீத்தாமணி கிஸ்கு

## குஜராத்

### ஜாலோத்:

**குமார் பால் & அமுதா**

**துதிக்க:** குந்தி கிராமத்தைச் சேர்ந்த தினேஷ் மற்றும் மதனி கிராமத்தைச் சேர்ந்த காளிபேன் பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். கோடியா கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி சுர்பால் பாயின் வீட்டில் பதுங்கியிருந்த பாம்பைக் கண்டுப்பிடித்து அப்புறப்படுத்த தேவன் உதவி செய்தார். லுகன்தா கிராமத்தில் வினோத் மற்றும் லிலூ இடையில் காணப்பட்ட பிரச்சனைகள் நீங்கி சமாதானமாய் வாழ தேவன் கிருபை செய்துள்ளார். காளியா கிராமத்தில் சுகவீனப்பட்டிருந்த மதன்பாய் ஜெபத்தின் மூலம் பூரண சுகம் பெற்று மீண்டும் வேலைக்குச் செல்ல கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குந்தி கிராமத்தைச் சேர்ந்த பூஜாபாய் என்பவர் பக்கவாதத்திலும், அவரது ஒரே மகள் மனநலம் பாதிப்பிலும் கஷ்டப்படுகின்றனர். பல இடங்களுக்கு அழைத்துச் சென்று வைத்தியம் செய்தும் சுகம் கிடைக்காத நிலையில் ஆலயத்திற்கு வந்து ஜெபிக்கிறார்கள். தேவன் அவர்களுக்கு அற்புத சுகம் தர; திடீரென உடல் பெலவீனப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஜலந்தர் கிராமத்தைச் சேர்ந்த காளியாபாய் பரிபூரண சுகம் பெற ஜெபிப்போம்.

### நஸ்வாடி:

**ஹென்றி சாலமோன் &**
**ஏஞ்சல் ஜெபா**

**துதிக்க:** கெஸ்வாடி கிராமத்தைச் சேர்ந்த மனிஷா என்ற வாலிபப் பெண் சுவிசேஷம் அறிவித்து 5 பேரை விசுவாசத்திற்குள் வழிநடத்தியுள்ளார். ஜந்தர் கிராமத்தைச் சேர்ந்த சுக்லாபாயின் குடும்பம் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். கடி மற்றும் சர்பரா கிராமங்களில் நடத்தப்பட்ட ஜெப நடைபாதை எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெற்றது. பீல் கிராமத்தில் நடத்தப்பட்ட வாலிபர் முகாமில் சுமார் 250 பேர் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர். டுங்டா மற்றும் கான்யாரியா கிராமங்களில் புதிதாக ஆராதனைக்குழுக்கள் துவங்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜந்தர் மற்றும் அம்பா கிராமங்களில் விரைவில் ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட; வரும் மாதம் நடைபெறவிருக்கின்ற சிறுவர் முகாம், தொடங்கப்படவிருக்கும் முதியோர் கல்வி, வாலிபர்களுக்கான ஒருநாள் உபவாச ஜெபம் ஆகியவை தடையின்றி நடைபெறவும், அநேகர் இக்கூட்டங்களில் பங்கு பெற்று கர்த்தரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளவும் ஜெபிப்போம்.

## அக்டோபர் 25 வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பிரேமா ராஜதுரை

### சூரத்: மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

**துதிக்க:** பாலிகாம் பகுதியில் வாலிபர் மற்றும் பெண்களுக்கான சிறப்புக் கூடுகைகள் நடத்த தேவன் கிருபை செய்தார். தொடர் ஜெபத்தின் மூலம் ஆலுபாயிக்கு நல்ல வேலை கிடைத்துள்ளது. அநேக ஆண்டுகளுக்கு பின் ஜெபத்தின் மூலம் ஆஷாவுக்கு அழகான குழந்தையைத் தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். ஊழியத்தில் உதவி செய்து வந்ததினால் வேலையிழந்த தாமஸ்க்கு நிரந்தரமான வேலையைக் கட்டளையிட்ட தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசி ஹேமா பேனின் வீட்டில் ஜெபக் கூட்டம் நடத்தியதால் அவளிடம் பேசுவதை நிறுத்திக்கொண்ட சங்கீதா பேன் தேவனால் தொடப்பட; கண்பார்வை இழந்துள்ள நிஷாவுக்கு தேவன் பார்க்கும் திறனைக் கட்டளையிட; மத்தியப்பிரதேசத்திலிருந்து சூரத்திற்கு வேலையினிமித்தம் வந்துள்ள துர்காபேன் பிசாசின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற; திட்டமிட்டப்படி பெண்கள் மற்றும் வாலிபர் கூடுகைகள் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.

### விஜயநகர்:
### விஜயகுமார் கே. & சுஷீலா

**துதிக்க:** பிரசவத்தின் போது ஆபத்தான நிலையிலிருந்த விசுவாசி தினேஷ் பாயின் மனைவிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகப்பிரசவத்தில் குழந்தைப் பிறக்க அனுக்கிரகம் பாராட்டினார். பள்ளிக்குச் செல்லாமல் திருட்டில் ஈடுபட்டு வந்த மகேஷின் மகன் யுவராஜ் பெற்றோரின் கண்ணீர் ஜெபத்தினால் மனந்திரும்ப தேவன் உதவி செய்துள்ளார். நீண்ட நாட்களாக தொண்டைக் கட்டியினால் சாப்பிட முடியாமல் கஷ்டப்பட்டு வந்த நைனா என்பவருக்கு ஜெபத்தின் மூலம் சுகமருளின தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கெட்ட கனவுகளால் தூக்கமின்றி உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ள நாக்குபாய்-க்கு தேவன் விடுதலை தர; சகோதரன் மரித்துவிட்டதால் மிகுந்த கவலையிலுள்ள தினேஷ் குடும்பத்திற்கு தேவன் ஆறுதல் தர; நரேஷ் பாய் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற; ராகேஷ், ஜிதேந்திரா, ரமேஷ், விபுல், பிரதாப் மற்றும் சஞ்சய் ஆகியோர் விரைவில் கிறிஸ்துவை அறிக்கையிட ஜெபிப்போம்.

### சொரம்பா:
### புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா

**துதிக்க:** பிசாசின் பிடியினால் 7 வயது வரை பேச முடியாமலிருந்த வகுச்சா கிராமத்தின் கிரண் என்ற சிறுவன் ஜெபத்தின் மூலம் பேச ஆரம்பித்துள்ளான். கஸ்வாவ் கிராமத்தின் ரதிலால் மின்சார தாக்குதலிலிருந்து தேவனால் காப்பாற்றப்பட்டார். திடீரென வாய் பேசமுடியாமல் போன இந்துபூரைச் சேர்ந்த கமலேஷ்பாய் ஆலயம் வந்து ஜெபித்த போது பேசும் திறனை தேவன் அவருக்கு அருளினார். அநேக வருடங்களாக குழந்தையின்றி தவித்த தினேஷ்பாயின் குடும்பத்தை இரட்டைக் குழந்தைகளினால் ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சவானி, மசாட் மற்றும் சசுரா கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட; இரத்த புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள 10-வது படிக்கும் அரவிந்த் பரிபூரண குணமடைய; மியாவாடி மற்றும் கடோத் கிராமங்களில் கிறிஸ்தவக் கூட்டங்களுக்குச் செல்வதை தடை செய்வோர் மனந்திரும்ப; வாரோலி பகுதியில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசலை தேவன் கட்டளையிட; விஹான் கிராமத்தில் ஆலயம் கட்ட ஏற்ற நிலத்தை தேவன் தந்தருள ஜெபிப்போம்.

**அக்டோபர்**
**26**
**சனி**

# தாத்ரா & நகர் ஹவேலி

### கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

**துதிக்க:** உமர்வனி கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி ரோகினிக்கு ஜெபத்தின் மூலம் அரசாங்க ஆசிரியைப் பணியை தேவன் அருளினார். கால் வீக்கத்திலிருந்து மீனா பேன் ஜெபத்தினால் சுகம் பெற்றார். சிக்கல்டா கிராமத்தில் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்ட விசுவாசி மீனாட்சி கர்த்தரால் அற்புதமாய் பாதுகாக்கப்பட்டார். விஷ பாம்புக் கடியிலிருந்து தாக்லு பேன், சன்னி பேன் ஆகியோரை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** உமர்வனி கிராமத்தில் நடத்தப்படவிருக்கும் வாலிபர் முகாமில் திரளானோர் பங்கு பெற; மதுபேன் கிராமத்தைச் சேர்ந்த நிர்மல் பேன் நரம்புத் தளர்ச்சி நோயிலிருந்து பரிபூரண சுகம் பெற; உடல் முழுவதும் கட்டிகளினால் அவதியுறும் சில்டி கிராமத்தைச் சேர்ந்த சத்னாம் சுகம்பெற; தங்கள் மனைவிகளை அடித்துத் துன்புறுத்தும் விலாஸ் மற்றும் லக்ஷ்மண் மனந்திரும்ப; சிறுநீரகப் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள அரவிந்த், அப்பாஜி பாய் ஆகியோருக்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

# மகாராஷ்டிரா

### தலாசரி: கெடாம் ஸ்ரீனிவாசராவ் & ராஜ்யலட்சுமி

**துதிக்க:** 5 பேர் மலர்ச்சி பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். மாதந்தோறும் ஜேரி திருச்சபையில் நடைபெறும் உபவாச ஜெபத்தில் திரளானோர் பங்குப் பெற்று ஜெபித்து வருகிறார்கள். வாங்கன் மற்றும் ஜென் கிராமங்களில் நடத்தப்பட்ட ஆவிக்குரிய எழுப்புதல் கூட்டங்களில் புதிதாக பலர் கலந்து கொண்டு நற்செய்தியைக் கேட்டனர். உத்வாவில் இரண்டு நாட்கள் நடைபெற்ற ஆத்தும ஆதாயப் பயிற்சி ஆசீர்வாதமாய் இருந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கோலன்பாடா கிராமத்தில் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஐந்து குடும்பங்கள் அவரை அறிக்கையிட காணப்படும் தடைகள் நீங்க; சால்னி மற்றும் கன்ஜட் கிராமங்களில் விசுவாசத்தை விட்டு பின்வாங்கியுள்ள மக்கள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; அனைத்து சபைகளிலும் பெண்கள் ஜெபக் குழுக்களை உருவாக்க எடுக்கப்படும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண; தலைமைத்துவ பொறுப்பினை ஏற்க அர்ப்பணமுள்ள பெண்கள் முன்வர ஜெபிப்போம்.

### அக்கல்குவா:

### ஜக்மோகன் சிங் & ஸ்வாதி

**துதிக்க:** 8 கிராமங்களில் பின்தொடர்ப் பணி செய்யவும், 60 பேரை தனித்தனியே அவர்கள் இல்லங்களில் சந்தித்து ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார். மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் விசுவாசிகள் 26 பேர் கலந்து கொண்டு தங்கள் கிராம மக்களின் இரட்சிப்பிற்காக ஊக்கமாய் ஜெபித்தனர். மொராம்பா கிராமத்தில் புதிதாக ஆராதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கணவனை இழந்துள்ள நிர்மலா மற்றும் அவரது பிள்ளைகளின் ஆறுதலுக்காக; நெஞ்சு வலியினால் கஷ்டப்படும் சுனந்தா பூரண குணமடைய; சிறுநீரகக் கல் பிரச்சனையினால் பாதிக்கப்பட்டுள்ள சுகன்யா சுகம்பெற; தொடர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள உஷாவுக்கு தேவன் பரிபூரண சுகமருள ஜெபிப்போம்.

## அக்டோபர் 27 ஞாயிறு

### சாலீஸ்காவ்:

**ஏசுபிரகாஷ் & சுனந்தாபெல்லி**

**துதிக்க:** நான்கு சபைகளில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் விசுவாசிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். பண்டோடா கிராமத்தைச் சேர்ந்த ஜுலால் கல்லீரல் மற்றும் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். தன்கர்வாடி மற்றும் சட்டானா கிராமங்களைச் சேர்ந்த தீபக் மற்றும் சரளா பிசாசின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றனர். சரீர பெலவீனத்தினால் சாப்பிடவும், நடக்கவும் முடியாமலிருந்த ரூத் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுபாஸ் சிராடி மனநல பாதிப்பிலிருந்தும், ஆனந்த் மற்றும் ஜோதி பக்கவாதத்திலிருந்தும், ஆஷா பேன் கண் நோயிலிருந்தும், நானாபாய் முதுகெலும்பு பிரச்சனையிலிருந்தும் சுகம் பெற; ஆச்சுபாய் பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற; வரும் நாட்களில் நடைபெறவுள்ள வாலிபர் முகாம், பெண்கள் கூடுகை, மூப்பர்கள் பயிற்சி ஆகியவை தடையின்றி சிறப்பாய் நடைபெற ஜெபிப்போம்.

### போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** கண்டாபானி, பார்சிபாடா, ஜுபானி கிராமங்களில் பின்தொடர் பணியின் மூலம் 175 பேருக்கு நற்செய்தி அறிவித்து ஜெபிக்க தேவன் கிருபை செய்தார். சிச்சாபானி கிராமத்தில் பஜன் மூலம் நற்செய்தி அறிவித்த போது சுமார் 500க்கும் மேற்பட்டோர் நற்செய்தி கேட்டனர். உம்ராடா கிராமத்தில் பெண்கள் மற்றும் விசுவாசிகளுக்காக நடத்தப்பட்ட ஆவிக்குரிய கூட்டங்கள் ஆசீர்வாதமாக முடிந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புடுக்கி கிராமத்தில் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டுள்ள பிரியன் என்ற 3 வயது சிறுவனுக்கு தேவன் அற்புதம் செய்ய; சந்த்சூர்யா கிராமத்தைச் சேர்ந்த ஹரியா மற்றும் சாந்தானா மனநல பாதிப்பிலிருந்து பரிபூரண சுகம்பெற; தப்பாசாயி கிராமத்தைச் சேர்ந்த மாதுபாயின் காலில் நீண்ட நாட்களாக ஆறாமலிருக்கும் புண் விரைவில் குணமடைய; உம்ர்டா கிராம ஆலயக் கட்டுமானப் பணி தடையின்றி நடைபெற; புதிதாக சுவிசேஷம் அறிவிக்க திட்டமிடப்பட்டுள்ள கிராமங்களில் தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட ஜெபிப்போம்.

### மாஷாவட் & தலோடா விடுதி:

**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** இரண்டு பேர் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். பூரிமால் மற்றும் கந்தார்சிகி கிராமங்களில் புதிய ஆராதனைக் குழுக்கள் துவங்க தேவன் கிருபை செய்தார். வட்சில் கிராமத்தில் ஆராதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தராவா கிராமத்தில் தெரு பிரசங்கத்தின் மூலம் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. அம்பாபானியில் மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் 40 பேர் இறுதிவரை இருந்து தேசத்திற்காக ஜெபிக்க உதவி செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சரீரத்தில் ஏற்பட்டுள்ள எரிச்சல் நீங்க பல வைத்தியங்கள் செய்தும் பலனின்றி இறுதியாக கிறிஸ்துவை அண்டியிருக்கும் காண்டிகல் பாபா சுகம் பெற்று முழுமனதுடன் இயேசு கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள; பூரிமால் கிராமத்தில் புதிதாக ஆராதனைக்கு வரும் சந்திர சிங் சரீரத்தில் காணப்படும் பல்வேறு வியாதிகள் நீங்கி சுகம்பெற; விசுவாசிகளின் நிலங்களில் நல்ல விளைச்சல்களை தேவன் கட்டளையிட; நடைபெறவிருக்கும் பெண்கள் கூடுகை, சபை மூப்பர்கள் கூடுகை ஆகியவை தடையின்றி சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## அக்டோபர் 28 திங்கள்

### பெயிண்ட்: அலெக்ஸ் பிரபு & பிரியா கெத்ஸி

**துதிக்க:** ஹெட்பாடா கிராமத்தில் 8 பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு சபையில் இணைந்தனர். மூன்று நாட்கள் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் 180 பேர் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபித்தனர். தான்பாடா கிராமத்தில் இரண்டு சுவிசேஷக் குழுக்கள் உருவாகின. சவர்னா மற்றும் வான்கானி கிராமத்தில் புதிய ஆராதனைக் குழுக்கள் துவங்கப்பட்டுள்ளன. நடக்க இயலாமலிருந்த ஹௌசாபாய் நடக்கும்படி தேவன் கிருபை செய்தார். விஷபாம்பு கடியிலிருந்து பர்வதா, சங்கீதாவையும், தேள்கடி விஷத்திலிருந்து ராம்ஜியையும் பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து சுரேஷ் சுகம்பெற; அடிக்கடி கருச்சிதைவு ஏற்பட்டு தற்போது கர்ப்பமாயிருக்கும் குஷீம் என்ற சகோதரியின் கர்ப்பத்தின் கனியை தேவன் பாதுகாக்க; நெஞ்சு வலியினால் கஷ்டப்படும் நுத்துன், பக்கவாதத்தினால் கால் வீக்கம் மற்றும் வலியினால் அவதியுறும் சபை மூப்பர் ரகுநாத் பூரண சுகம் பெற; பிசாசின் பிடியிலிருந்து ஹெமந்துக்கு தேவன் விடுதலை அருள; முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டதால் இடுப்பின் கீழுள்ள உடல் பகுதி செயலிழந்து படுத்தப்படுக்கையாயிருக்கும் 21 வயது பாவுராமுக்கு தேவன் அற்புத சுகமருள; 2 முறை குழந்தை பிறந்து இறந்துள்ள ரஞ்சனாவுக்கு இம்முறை பிரசவத்தில் குழந்தை சுகத்துடன் பிறக்க; காம்சேத் மற்றும் தேவ்டொங்ரா எதிர்ப்பு சம்பந்தப்பட்ட நீதிமன்ற வழக்கு விரைவில் முடிக்கப்பட ஜெபிப்போம்.

## கர்நாடகா

### முண்ட்காட்: நரேந்திரா குமார்

**துதிக்க:** ஊக்கமான ஜெபத்தினால் மனோஜ்-க்கு ஏற்ற வேலை கிடைக்க தேவன் உதவி செய்தார். கடந்த 4 ஆண்டுகளாக காய்ச்சல் மற்றும் சரீர பெலவீனத்தினால் பாதிக்கப்பட்டிருந்த ஆராதனா என்ற சகோதரி ஆலயத்திற்கு வந்து ஜெபித்த போது தேவன் பரிபூரண சுகத்தை அருளினார். கீழே விழுந்து கை எலும்பு முறிவு ஏற்பட்ட விமலாவுக்கு பூரண சுகத்தைத் தந்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லதா, லக்ஷ்மி, கீதா, ஸித்தப்பா ஆகியோரை குழந்தை பாக்கியத்தினால் தேவன் ஆசீர்வதிக்க; கஸ்தூரி மற்றும் அவரது கணவன் இடையே காணப்படும் மனக்கசப்புகள் நீங்கி சமாதானம் பெற; பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டுள்ள நிர்மலாவுக்கு தேவன் பரிபூரண சுகம் தர ஜெபிப்போம்.

### *கண்மணிப்போல் காக்கும் கர்த்தர்*

*ஒடிசா மாநிலம், ஜஷிப்பூர் பணித்தளத்திலுள்ள கடுகுட்டு கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி சாத்து. அவரது 3 வயது மகள் விளையாடிக் கொண்டிருந்த போது கால் இடறி எரிந்து கொண்டிருந்த விறகு அடுப்பின் மீது விழுந்ததில், அடுப்பில் எரிந்து கொண்டிருந்த சிறு குச்சி அவளின் கண்ணில் குத்தியது. பிள்ளையை முதலில் ஆலயத்திற்கு எடுத்துச் சென்று ஜெபித்த விசுவாசி சாத்து, பின்னர் மருத்துவமனைக்கு கொண்டுச் சென்றாள். தற்போது கண்ணில் எந்த பிரச்சனையும் இன்றி குழந்தை நன்றாக உள்ளது. ஜெபத்தினால் தேவன் தனது குழந்தைக்கு பார்வை அருளினார் என்று சாத்து அநேகருக்கு சாட்சி பகிர்ந்து வருகிறாள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!*

அக்டோபர்
29
செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. ஹட்நெயில்ஹிங் தல்சாகம்

## நிட்குண்டி:

**மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா**

**துதிக்க:** ஜெயஸ்ரீ என்ற விசுவாசியின் நிலப் பிரச்சனை ஜெபத்தினால் சரிசெய்யப்பட்டது. சோம்லிபாய் இருதயப் பிரச்சனையிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றார். லக்ஷ்மம்மா இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டப் பின் ஜெபத்தின் மூலம் 3 ஆண்டுகளுக்கு முன்பு 3 இலட்சம் ரூபாய் கடனாக வாங்கிய அவரது அண்ணன் ஒரே வாரத்தில் அந்த பணத்தைத் திருப்பித் தர தேவன் உதவி செய்தார். வேலைத் தேடி அலைந்த பிரதீப் என்ற விசுவாசிக்கு பேக்கரி துவங்க தேவன் கிருபை செய்தார். விசுவாசத்தினிமித்தம் கடும் எதிர்ப்பைச் சந்தித்து அதனால் தன் அரசாங்க வேலையை இழந்த விஜயலக்ஷ்மிக்கு ஜெபத்தின் மூலம் வேலை திரும்பக் கிடைக்க கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மீண்டும் உபத்திரவத்திற்குள்ளாகும் உப்பல்தின்னிதாண்டாவிலுள்ள நமது பஞ்சாரா விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக; இடது காலிலும், வலது கை விரல்களிலும் வீக்கம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள கஸ்தூரிபாயையும், கல்லீரல் பிரச்சனைக்கு சிகிச்சை பெறும் ராஜுவையும் தேவன் விரைவில் குணப்படுத்த; குடிக்கு அடிமைப்பட்டு குடும்பத்தில் பிரச்சனை உண்டாக்கும் சந்தோஷ் கும்சியை தேவன் விடுதலையாக்க; வீட்டைவிட்டு காணாமல் போன சிவானந்தர் மீண்டும் சுகத்துடன் வீடு திரும்ப; யோகேஷ், மௌனெஷ் மற்றும் ஜகதீஷ் ஆகியோருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க ஜெபிப்போம்.

# ஆந்திரப் பிரதேசம்

## கொத்தச்செருவு: தேசாய் திலீப் பாய் & ராந்தே லக்ஷ்மிபேன்

**துதிக்க:** பைராபுரம், மைலிபள்ளி, ஜனக்கம்பள்ளி மற்றும் லோச்சார்யா கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் திறந்த வாசலைக் கட்டளையிட்டார். கடந்த ஓராண்டு காலமாக கால் வீக்கத்தினால் நடக்க முடியாமல் படுக்கையிலிருந்த ஓபுலம்மா கிறிஸ்துவை விசுவாசித்து ஜெபித்த போது, ஜெபத்தைக் கேட்ட தேவன் அவர் எழும்பி நடக்க உதவி செய்ததற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நாராயண் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து சுகம்பெற; கால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டப் பின்பும் வலியினால் கஷ்டப்படும் லக்ஷ்மம்மா, நாக லக்ஷ்மிக்கு தேவன் பூரண சுகம் தர; லோக்சர்லா கிராமத்தில் புதிய ஆராதனைக் குழு துவங்கப்பட; சாய் நகரில் ஆலயம் கட்ட ஏற்ற நிலம் கிடைக்க; விசுவாசி அஜய்-க்கு நிரந்தரமான வேலை கிடைக்க; கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினால் குடும்பத்தினரால் எதிர்ப்புகளைச் சந்தித்து வரும் பிரபாவதி மற்றும் திருப்பதி விசுவாசத்தில் உறுதியாய் இருக்கவும், குடும்பத்தினர் இயேசுவின் அன்பினால் தொடப்படவும் ஜெபிப்போம்.

**அக்டோபர் 30**
**புதன்**
*உபவாச ஜெபநாள்*

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. எஸ்தர் ஜான் டேவிட்சன்

### குப்பம்: வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** பெல்லஹோட்கிலா கிராமத்தில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதின் மூலம் மூன்று குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர். சிசல்கள்ளி கிராமத்தில் புதிய ஜெபக்குழு துவங்கப்பட்டுள்ளது. பிரிந்து வாழ்ந்து வந்த நாகராஜ் & புனிதா தம்பதியினர் குடும்பக் கூடுகையில் பங்குபெற்றப் பின் சேர்ந்து வாழ தேவன் உதவி செய்தார். தொடர் ஜெபத்தின் மூலம் சியாமளா வாய் புற்றுநோயிலிருந்து சுகம் பெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பண்டிகை நாட்களில் விசுவாசிகளுக்கு ஏற்படும் உபத்திரவங்களிலிருந்து தேவன் அவர்களைப் பாதுகாக்க; கொண்டதிம்மனபள்ளி கிராமத்தில் நடைபெறவிக்கும் கிறிஸ்துவை அறிக்கையிடும் நிகழச்சி தடையின்றி நடைபெற; மிட்டப்பள்ளி மற்றும் கடுவனப்பள்ளி கிராம ஆலயங்களில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டு ஆலயம் பாதுகாக்கப்பட; ஆலயங்களின் பெயர்கள் நமது ஸ்தாபனத்தின் பெயருக்கு மாற்றப்பட்டு கிராமப் பதிவேடுகளில் வெளியிடப்பட ஜெபிப்போம்.

## தமிழ்நாடு

### சந்திரபட்டி: அர்ச்சனா மோகன்

**துதிக்க:** இரண்டு புதிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, 13 பேருக்கு புதிய ஏற்பாடு விநியோகிக்கப்பட்டுள்ளது. சிறுவர் மத்தியில் ஊழியம் மற்றும் உபவாச ஜெபம் நடத்தப்பட்டது. சந்திரபட்டி கிராமத்தில் மஞ்சுளா & முருகன் என்ற தம்பதி வாஞ்சையோடு சுவிசேஷம் கேட்டனர். மௌலி மற்றும் சிவபிரியாவுக்கு காய்ச்சலிலிருந்தும், சாவித்ரி அரவிந்த் என்பவருக்கு டைபாயிடிலிருந்தும் ஜெபத்தின் மூலம் கர்த்தர் பூரண சுகமருளினார். விசுவாசத்தைவிட்டு பின்வாங்கிப் போயிருந்த தனபாக்கியம் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சந்திரபட்டி கிராமத்தைச் சேர்ந்த அருணாகிரி மற்றும் சௌரம்மா இயேசுவின் அன்பினால் தொடப்பட; இப்பணித்தளத்தில் புதிய ஆத்துமாக்களை தேவன் திரளாய் எழுப்பித்தர; சிறுவர் மத்தியில் நடைபெறும் ஊழியங்களை தேவன் ஆசீர்வதிக்க; போக்குவரத்து வசதிகள் குறைவாக இருக்கும் இப்பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களைச் சந்தித்து வரும் நமது மிஷனெரிக்கு தேவன் நல்ல பிரயாணப் பாதுகாப்பையும், சரீர சுகத்தையும் தர ஜெபிப்போம்.

### வார்லி மொழிபெயர்ப்புப்பணி: ஆபிரகாம் ஜி. & ஹேமலதா

**துதிக்க:** மத்தேயு, மாற்கு சுவிசேஷம் திருத்தியமைக்கப்பட்டு புதுப்பிக்கப்பட தேவன் உதவி செய்தார். வார்லி பாடல்கள் திருத்தப்பட்ட பதிப்பு பணிகள் செய்யப்பட தேவன் கிருபை செய்தார். வேதத்தில் முக்கிய சொற்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளது. மிஷனெரியின் இளைய மகளின் வயிற்றிலிருந்த 6.5 மி.மீ. கட்டி கரைந்து போக தேவன் கிருபை செய்தார். இருச்சக்கர வாகனத்தில் சென்ற நமது ஊழியர்கள் ஒரு இடத்தில் வாகனம் நிறுத்தியபோது மின் கம்பி அறுந்து வாகனத்தின் மீது விழுந்த நிலையில் அற்புதமாய் ஊழியர்களை பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய ஏற்பாடுடன் சங்கீதம், நீதிமொழிகள் சேர்க்கப்பட்டு வெளியிடப்பட எடுக்கும் முயற்சிகளை தேவன் வாய்க்கப்பண்ண; மொழி உதவியாளர்களின் ஒத்தாசைக்காக, அவர்களின் ஆரோக்கியத்திற்காக; வார்லி மக்களுக்கு தேவன் நல்ல அறுவடையைக் கட்டளையிட; எழுத்தறிவு புத்தகத்தின் திருத்தும் பணிகளுக்காக; கண் பார்வை மங்கலாக காணப்படும் மிஷனெரிக்கு தெளிவான கண்பார்வையை தேவன் அருள ஜெபிப்போம்.

அக்டோபர்
31
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுச்சானோ யந்தன் த்சாங்சே சங்தம்

## மேச்சேரி:

### தர்மராஜ் ஆர். ஆர். & மரியசெல்வி

**துதிக்க:** தங்கம்மாள், லக்ஷ்மி, கலா, ஆகியோர் புதிதாக ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். துரைசாமி மற்றும் பொன்னம்மாளின் ஊக்கமான ஜெபத்தினால் நிலத்தில் விளைந்த பயிர்கள் எவ்வித சேதமுமின்றி நல்ல பலனை தந்திருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 3 வயதாகியும் இன்னும் பேச முடியாமலிருக்கும் சிறுவன் கவிபுகழுக்கு பேசும் திறனை தேவன் கட்டளையிட; டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு கை, கால் முடங்கி கிடக்கும் ஏசுதாஸ் பூரண சுகம் பெற; செல்வராஜ், முருகேசன், மூர்த்தி, கோபி, ஆண்டியப்பன் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; சீனிவாசன் & பிரியா தம்பதியினரை குழந்தை பாக்கியத்தினால் தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

## தென் மண்டலம்:

### பால்தயாசிங் & பெனில்டா

**துதிக்க:** கால்வாயில் விழுந்து நடக்க முடியாமல் கஷ்டப்பட்ட பாலதொட்டனபள்ளி ராஜம்மா ஜெபத்தால் சுகம் பெற்றார். வேப்பனப்பள்ளி பணித்தளத்தில் பந்திகுரி ஆலயத்தைச் சுற்றியுள்ள 7 கிராமங்களில் தடையின்றி ஊழியம் நடைபெற கர்த்தர் கிருபை செய்தார். மூன்று ஆண்டுகளாக நடக்க இயலாமலிருந்த சிக்கத்தொட்டி என்ற தாயாருக்கு ஜெபத்தினால் தேவன் நடக்கும்படி செய்தார். புவனேஸ்வரிக்கு தேவன் சுகப்பிரசவம் அருளினார். காவேரிப்பட்டினத்தைச் சேர்ந்த கனகாவை தேவன் நெஞ்சு வலியிலிருந்து குணமாக்கினார். 4 இடங்களில் படக்காட்சி மற்றும் நாடக ஊழியங்கள் நடைபெற்றன. தபால்மேடு சரோஜம்மாவின் பேரனை விபத்திலிருந்து தேவன் பாதுகாத்தார். வானமங்களம் சபையில் நான்கு பேர் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். தளி பணித்தளத்தில் துரைசிங் & ரெஜினா குடும்பத்திலிருந்த 10 இலட்சம் கடனை அடைக்க தேவன் உதவி செய்தார். ஒற்றைத் தலைவலியிலிருந்து பாலசுப்பிரமணிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகமருளினதற்காக அவரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புட்டம்மா பக்கவாதத்திலிருந்து சுகம்பெற; ஜோடுகொத்தூரிலுள்ள நடராஜ் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து சுகம் பெற; உத்தனப்பள்ளி ஆலயத்தில் பின்வாங்கிய விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்து ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள; சிவனிபள்ளியில் ஆலயம் கட்டப்பட; மணியம்பாடி ஆலயத்தைச் சுற்றியுள்ள கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட; சாமனப்பள்ளி விஜியம்மா குடும்பத்தில் சமாதானம் நிலவ; அஞ்செட்டி பணித்தளத்தில் உமாவின் கணவர் அசோக், குமாரத்தினா ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற; பேவநத்தம் சபையைச் சார்ந்த மங்கா பிசாசின் தொல்லை மற்றும் குடும்பப் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற; சங்கீதாவுக்கு கர்ப்பத்தின் கனியை தேவன் அருள; காமாட்சி, கிரேஸிசபரி மற்றும் அண்ணாமலைக்கு திருமணத் தடைகள் நீங்கி ஏற்ற வாழ்க்கைத் துணை கிடைக்க; காளிங்காவரம் கிராமத்தைச் சேர்ந்த சிவம்மாவுக்கு தேவன் சுகப்பிரசவம் அருள; பெரிய மலை பயிற்சி மையத்தின் சுற்றுச்சுவர் விரைவில் கட்டப்படவும், தடைகள் நீங்கவும் ஜெபிப்போம்.

## 399 மிஷனரி ஆல்பம்

மிஷனெரி அருட்திரு. ஜங்கோலுன் தௌதாங் அவர்கள், மணிப்பூர் மாநிலம், கங்போக்பி மாவட்டத்தைச் சேர்ந்த பாய்மோல் கிராமத்தில் வசித்து வந்த திரு. ஹெம்கோசெய் தௌதாங் & திருமதி. நெம்ங்கா ஆகியோருக்கு மூத்த மகனாக 28.01.1982 அன்று பிறந்தார். இவருக்கு 5 சகோதரிகளும், ஒரு சகோதரரும் உண்டு. இவரது தகப்பனார் அரசு பணி செய்து வந்த காரணத்தினால் பிள்ளைகளுக்கு நல்ல எதிர்க் காலத்தைக் கொடுக்க விரும்பி குடும்பத்துடன் இம்பாலுக்கு இடம் பெயர்ந்தார். சாதாரண கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த இவர் ஆலயம் மற்றும் ஞாயிறு பள்ளியின் ஈடுபாடுகள் மூலம் சிறந்த பக்திக்குரியவராய் வளர்ந்தார். 1996 அக்டோபர் 26 அன்று மறுபிறப்பின் அனுபவம் மற்றும் ஆத்தும பாரத்தை பெற்றார். சி.பி.சி.ஏ. சபை நியூ லாம்புலன்ஸ்-ல் சிறுவர் ஞாயிறு பள்ளி ஆசிரியராக 7 வருடங்கள் பணி செய்த இவர் தன் சபையில் வாலிபர் குழுத் தலைவராகவும் செயல்பட்டார். 2000-ம் ஆண்டு செப்டம்பரில் 2 தீமோ. 1:9 வசனத்தின் மூலம் தேவன் இவரோடு இடைப்பட்டதினால் மிஷனெரி ஊழியத்திற்கென்று தன்னை அர்ப்பணித்தார். மணிப்பூர் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றப்பின் ஜுன் 2007-ல் முழுநேர மிஷனெரியாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்தார். ஊழிய பயிற்சிக்குப்பின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் கான்பூர் பிராந்திய அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டார்.

மிஷனெரி சகோதரி நிகய்தியான்சிங் மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த மறைந்த திரு. நெஞ்சதுன் ஹவுசல் & திருமதி. நெம்சாதாங் என்பவர்களுக்கு மகளாக 17.08.1985 அன்று பிறந்தார். இவருக்கு 4 சகோதரிகளும், ஒரு சகோதரரும் உண்டு. சிறந்த கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்த இவர் குழந்தைப் பருவத்திலிருந்தே தேவ பக்தியில் வளர்க்கப்பட்டார். இவரது தந்தை சபை மூப்பராகவும், அநேக ஊழியர்களை தாங்குபவராகவும் இருந்தார். தனது ஆலயத்தில் நடைபெற்ற சிறுவர் இரட்சிப்பு முகாமில் 1990-ம் ஆண்டு ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். திருவனந்தபுரம் வேதாகமக் கல்லூரியில் பி.டி.எச். படிப்பும், மணிப்பூர் கிரேஸ் வேதாகம கல்லூரியில் எம்.டிவ். படிப்பும் முடித்தார். இ.பி.சி.சி. அப்பர்லங்காவில் இரண்டு வருடம் சிறுவர் ஞாயிறு பள்ளியில் பணிசெய்தார். ஜுன் 2008-ம் ஆண்டு நமது இயக்கத்தில் முழுநேர ஊழியராய் இணைந்தார். ஊழியப் பயிற்சிக்குப்பின் சத்தீஸ்காரிலுள்ள பத்தல்காவ் சிறுமியர் விடுதிக்கு அனுப்பப்பட்டார். 29.01.2010-ம் தேதி அன்று திரு. ஜங்கோலுன் தௌதாங் அவர்களுடன் திருமணத்தில் இணைக்கப்பட்டார். அதன்பின் பெஹேதா, தேவா பணித்தளங்களிலும், கோண்டா சிறுவர் விடுதியிலும் குடும்பமாக ஊழியம் செய்த இவர்கள் 2018-லிருந்து காட்டாம்பூர் பணித்தளத்தில் ஊழியம் செய்து வருகின்றனர்.

தேவன் இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகளையும், ஒரு ஆண் குழந்தையையும் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகள் பிரிஸில்லா (21.03.2016) 2-ம் வகுப்பும், இளைய மகள் யூனிஸ் (17.07.2017) முதலாம் வகுப்பும் மணிப்பூரில் படித்து வருகின்றனர். கடைசி மகன் ஸ்டீபன் (25.04.2022) மிஷனெரிகளுடன் உள்ளான். இம்மிஷனெரி குடும்பத்தை நம் ஜெபத்தில் தாங்குவோம்.



**அருட்திரு. ஜங்கோலுன் தௌதாங் & திருமதி. நிகய்தியான்சிங் ஹௌசல்**

Regd. Newspaper for India No.17759/69

போ (அ) அனுப்பு

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# கர்நாடக மாநில முகாம் 2024

இடம்

**இந்தியா கேம்பஸ் குரூசேட் ஃபார் கிரைஸ்ட்**
எண்ணூர் ரோடு, லிங்கராஜபுரம், பெங்களூர் – 560 084.

## அக்டோபர் 11-13

வெள்ளி & சனி - கா. 8.00 முதல் இ. 8.00 வரை
ஞாயிறு - கா. 8.00 முதல் மா. 4.30 வரை

**கருப்பொருள்** நான் எம்மாத்திரம் (2 சாமுவேல் 7:18)

## சிறப்புச் செய்தியாளர்கள்

- அருட்திரு. S. ஜாண் பெர்லின்
  GS, FMPB (துவக்கவுரை)
- Dr. பிரபு சிங்
- அருட்திரு. சாகர் சுந்தர் ராஜ்
- அருட்திரு. I.K. ஆபிரகாம்
- திருமதி. கிறிஸ்டி ராஜன்
- Dr. E. ராஜன்
  (இளம் தம்பதியர்களுக்கு)
- திரு. தீப்பக் சந்தர். M.
  Scripture Union (வாலிபர்களுக்கு)

### முகாமின் தரிசனமும் செயல்முறையும்

- இறுதிக்கட்டளை புத்துயிர் பெறவேண்டும்.
- இயேசுவின் சீஷர்களுக்குள் சுவிசேஷப்பணியின் வாஞ்சை அதிகரிக்க வேண்டும்.
- சாட்சியாயிருப்பதற்கும் சுவிசேஷப்பணியில் ஈடுபாடு கொள்வதற்குமான அர்ப்பணிப்பு புதுப்பிக்கப்பட வேண்டும்.

### இலக்கை அடையும் வழிமுறைகள்

- மிஷனரியாகச் செல்லவும், ஜெபிக்கவும், தாங்கவும் அகத் தூண்டுதல் பெற்ற புதிய பங்காளர்களை கண்டுபிடித்தல்
- ஒவ்வொரு உறுப்பினரையும் ஒவ்வொரு குடும்பத்தையும் சுவிசேஷப் பணிக்காக ஜெபிக்கவைப்பது.
- புதிய ஜெபக்குழுக்களை உருவாக்கி இளந்தலைவர்களை ஆயத்தப் படுத்துதல்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

### இளம் தம்பதியர் கூடுகை

தேவ பணியோடு ஒருங்கிணைந்தது

சிறப்பு செய்தியாளர்கள்
Rev. Dr. ராஜன் & Mrs. கிறிஸ்டி ராஜன்

12 அக்டோபர் 2024
மதியம் 2 முதல் மாலை 5 வரை
இந்தியா கேம்பஸ் குருசேடே் ஃபார் கிரைஸ்ட்
லிங்கராஜபுரம், பெங்களூர்

15 வருட விவாக வாழ்வை உள்ளவர்கள்
மதிய உணவுடன் தொடங்கும்

**FMPB - KARNATAKA SNEHALAYA**
# 173, 4th Cross, Chikkanappa Layout, Byrathi, Kothanur, Bengaluru - 560 077.
☎: **Rev. Vijay** - 9444393166, **Rev. Elangovan** - 9902288750, **Rev. Justin** - 7889050020, **Bro. Ananda Kumar** - 9686436937, **Rev. Raja (Hubballi)** - 9036671342, **Rev. Robert (KGF)** - 9654373422. **E-mail:** vijaypisaac@fmpb.org

ஜெபியுங்கள், பங்குபெறுங்கள் & ஆசீர் பெறுங்கள்

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***